நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை. தோற்றம்: 14.09.1901

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 04 ஏப்ரல்-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10



வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911



மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

## தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

| | |
|---|---|
| மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A. | தலைவர் |
| மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS | துணைத் தலைவர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | செயலாளர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | உறுப்பினர் |
| திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை | உறுப்பினர் |
| திரு. ச.பராங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைநம்பி B.E., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L., | உறுப்பினர் |
| திரு. அழ.சித்தையா | உறுப்பினர் |
| திரு. வெ.சந்திரசேகரன் | உறுப்பினர் |

## செந்தமிழ்க் கல்லூரிக்குழு

| | |
|---|---|
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக் | தலைவர் |
| திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil., | செயலாளர் |
| திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. ச.தசரதராமன் B.A.,B.L., | உறுப்பினர் |
| திரு. து.மாயராசன் B.Sc., B.L., | உறுப்பினர் |
| திரு. இரா.ஜெகனாதன் B.E., | உறுப்பினர் |
| திரு. லெ.சிவக்குமார் B.E., | உறுப்பினர் |
| திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc., | உறுப்பினர் |
| திரு. கி.ராஜாராம் M.B.A., | உறுப்பினர் |
| முனைவர் க.பாலகிருஷ்ணன் | பல்கலைக்கழக நியமன உறுப்பினர் |
| முனைவர் சு.விஜயன் | உறுப்பினர் |
| முனைவர் கி.வேணுகா | உறுப்பினர் |

# பொருளடக்கம்

1. புல் 6
இரா.இளங்குமரன்

2. சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீஸ் 11
பேராசிரியர் முனைவர் கா.அரங்கசாமி

3. தொல்காப்பியத்தில் படிமலர்ச்சிக் கோட்பாடு 20
பேராசிரியர் முனைவர் க.முத்துச்சாமி

4. வள்ளுவர் காட்டும் அரமும் மரமும் 32
மறைமலை இலக்குவனார்

5. உரிச்சொல் 33
முனைவர் மு.கற்பகம்

6. தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள் 37
முனைவர் பா.நேருஜி

7. சங்கச் செய்திகள் 41

# இதழ் மணம்

இதழ் மணம் பரப்பும் வகையில் பேராசிரியப் பெருமக்கள் பலர் இத்திங்கள் வெளிவரும் இதழில் பல அரிய கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

குறிப்பாகப் பேரறிஞர் இரா.இளங்குமரனாரின் "புல்" என்னும் தலைப்பில் தொடர் கட்டுரை ஒன்று வெளிவருகிறது. புல் தமிழ்கூறும் நல்லுலகில் வளர்ந்து செழித்து அழகும் மணமும் கூட்டும் திறத்தைக் கற்பார் உள்ளம் இன்புறும் வண்ணம் படைத்துள்ளார். புல்லின் இயற்கை அழகைக் கண்முன் கொண்டு வருவதோடு அச்சொல் இலக்கியத்தில் உவமை நலம்பெறப் புலவர் பெருமக்களால் எடுத்தாளப்பட்டுள்ள பாங்கினை ஆசிரியர் விளக்கும் திறம் அறிவுக்கு இன்பம் பயப்பதாகும். இயற்கைத் தோற்றத்தைக் கண்டு அதன் எழிலைப் பாடுவது அழகின் சிரிப்பு. கற்பவர் நெஞ்சில் அழகுணர்வோடு இயற்கையினிடத்து அன்பும் அது நல்கும் அறிவும் என்றும் நீங்கா இடம்பெறச் செய்வது எழுதுகோலின் ஏற்றம்; அதுவே கவிதை என்பர்.

அத்தகைய எழுத்து; உரைநடையாக இருந்தாலும் கவிதையாக இருந்தாலும் உணர்ந்து கற்பவர்க்கு அவை கவிதையே. அந்த வகையில் பேரறிஞர் இரா.இளங்குமரனார் தம் கனிந்த மொழியில் சொல்நயம் புரியக் கற்பவருக்குத் தமிழ் இலக்கியப்பாடம் நடத்துவது போலக் கட்டுரையை அமைத்துள்ளார். அவருடைய தமிழ் நடைக்காகவும் இலக்கியச் செல்வத்தைப் போகிற போக்கில் உணர்த்தும் பாங்கிற்காகவும் இயற்கைக் காட்சியைப் பேசும் படமாக்கி எழுத்தில் பதித்திருப்பதற்காகவும் பலமுறை படிக்கத் தூண்டுகிறது.

கொங்குநாட்டுக் கல்விச் செல்வர், தாராபுரம் பேராசிரியர் கா.அரங்கசாமி அவர்கள் "சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீஸ்" என்னும் கட்டுரை வரைந்துள்ளார். பேராசிரியர் கா.அரங்கசாமி "கம்பநாடகம்" என்னும் அரிய ஆராய்ச்சி நூலை எழுதிய தமிழ்ச் சான்றோர். அவர்கள் நீண்டகாலமாகப் பொதுமக்களுக்கு உடுமலை, தாராபுரம் ஆகிய இடங்களில் தொடர்ந்து திருமூலரின் திருமந்திரத்தைத் தொடர்சொற் பொழிவாகத் திங்கள்தோறும் நடத்தி வருகின்றார்.

பேராசிரியர் கா.அரங்கசாமி தம் கட்டுரையில், "செல்வம் ஒருவருக்கு நன்மையைக் கொண்டுவராது, ஆனால் நன்மை அவருக்குச் செல்வத்தையும், ஆசிகளையும் வழங்கும். இவ்வுண்மை தனிமனிதனுக்கு மட்டுமல்ல ஒரு நாட்டிற்கும் பொருந்தும் என்பது சாக்ரட்டீசின் கொள்கை" எனத் தத்துவஞானி சாக்ரட்டீசை அறிமுகப்படுத்தும் நெறி, கற்பவர் தம் வாழ்வில் மறவாது போற்ற வேண்டிய மெய்ப்பொருட் செய்தியாகும். கட்டுரை ஆழ்ந்த வாசிப்பிற்குரியது.

பேராசிரியர் க.முத்துச்சாமி "தொல்காப்பியத்தில் படிமலர்ச்சிக் கோட்பாடு" என்னும் தலைப்பில் அறிவியல் சிந்தனை தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதை விளக்குகிறார். தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் உலகின் பல பகுதிகளில் நூல்கள் பல தோன்றின. அவை உலகில் உள்ள பொருட்களும் அவற்றைச் சார்ந்திருக்கின்ற உயிர்களும் கடவுளால் தோற்றுவிக்கப்பட்டன என்று எழுதின. அவை மறைநூல்கள் எனவும் அவற்றுக்கு மாறுபட்டுக் கருத்துத் தெரிவிக்கக் கூடாது எனவும் இன்றளவும் பேசப்படுகிறது. அப்பழைய காலத்திலேயே தொல்காப்பியம் மேலைநாட்டு அறிவியல் உலகம் போற்றும் உண்மைகளைப் போகிற போக்கில் சுட்டிச் செல்வதைப் "படிமலர்ச்சிக் கோட்பாடு" என்னும் தலைப்பில் விரிவாக ஆய்வு செய்திருக்கிறார். பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை விரிவாக ஆராய்ச்சி செய்த மேலை நாட்டு அறிஞர் டார்வின் உலகத்தின் சிந்தனையை அறிவியல் நோக்கில் சிந்திக்க வைத்தவர்; அவருக்கு முன்பு பலரும் பழைய மறைநூல்களில் சொல்லியவற்றைக் கிளிப் பிள்ளைகள் போலப் பேசி வந்தனர். உலகச் சிந்தனை வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய மேலை நாட்டுச் சிந்தனையாளர்களின் சிந்தனைகள் தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருப்பதையும் தமிழ்மக்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே அறிவியல் பார்வை உடையவர்கள் என்பதையும் வலியுறுத்தி,

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின் இயல்பு
என மொழிப இயல்புணர்ந் தோரே"

எனக் காலமும் இடமும் முதற்பொருள் எனப் பேசும் முதற்பெருநூல் தொல்காப்பியம் என்பதைப் பேராசிரியர் க.முத்துச்சாமி எடுத்துரைப்பது தமிழும் அறிவியலும் நெருக்கமான உறவுடையது என்பதைக் காட்டுகிறது.

மற்றும் பேராசிரியர் மறைமலை இலக்குவனார், பேராசிரியர் மு.கற்பகம் ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

| இதழ்க்கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள்கட்டணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழ்க்கட்டணம் | ரூ. 10 | |

# புல்

இரா.இளங்குமரன்

'புல்' என்பது ஓரறிவு முதல் உயிரி; நிலைத்திணை. நிலத்தொடு பொருந்திக் கிடப்பது. அதனால் 'புல்' என்பது பொருந்துதல் பொருள் தந்தது.

ஊடு இடைவெளி இல்லாமல் தழுவுதல் 'புல்லுதல்' எனப்பட்டது.

**"புல்லிக் கிடந்தேன்"** என்றது வள்ளுவம்.

'புல்' காலால் மிதிபடும் தன்மையது; சிறுமையது. அதனால் 'புல்லியல்' என அத்தன்மையர் வழங்கப்பட்டனர். புல்லின் தன்மை 'புன்மை' எனப்பட்டது. புன்மை சிறுமையானது எனவும் ஆயது.

புல் சிறிது; அதன் இலையோ இன்னும் சிறிது; அதில் விழுந்த பனித்துளியோ மேலும் சிறியது. அப்பனித் துளியின் காட்சி ஒருவர்க்கு முத்து மூக்குத்தியாகத் தோற்றப் பொலிவு காட்டியது. ஒருவர்க்குத் தினைத்தனைப் பனித்துளிமேல் பனை மரமே தோற்றம் தந்தது. திருக்குறளின் சிறிய அடிகளுள் அமைந்த பெரிய பெரிய பொருள்களுக்கு எடுத்துக் காட்டாயிற்று. அதனால்,

***"தினை அளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட***
***பனைஅளவு காட்டும் படித்தால் - மனையளகு***
***வள்ளைக்கு உறங்கும் வளநாட வள்ளுவன்***
***வெள்ளைக் குறட்பா விரி"***

என்றார் (திருவள்ளுவமாலை).

அப் பனித்துளி முன் பனை என்ன, பனிமலையே கோடு கோடாகத் தோற்றம் தரும் என்று சிலப்பதிகாரச் சிறப்புக்கு உவமை காட்டினார். வாழ்வின் நிலையாமையைக் காட்டப் புல் நுனிப் பனிநீர் பயன்பட்டது. அதனால்,

***"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி***
***இன்னினியே செய்க அறவினை - இன்னினியே***
***நின்றான் இருந்தான் கிடந்தான்தான் கேளலறச்***
***சென்றான் எனப்படுத லால்"***

என்றார் நாலடியார்.

புல்லில் ஆழத்துள் ஆழமாகச் செல்வது - வேரைப் பிடுங்கி எடுத்தாலும் அதன் கீழும் மண்ணைப் பற்றிக் கிடந்து படிப்படியே மண்ணின் மேல்வந்து படர்வது; அற்றுப் போகச் செய்தாலும் அற்றுப் போகா வாழ்வினதாம் அதனை 'அறுகம்' புல் என்றனர்.

நிலத்தில் கிடக்கும் புல் நிமிர்ந்து நீண்டு எழுவதால் அமைந்தது கோரைப் புல்! வேருக்குக் கீழே கோலி உருண்டை போன்ற கிழங்கு அதற்கு உண்டு. கோரைக்கிழங்கு இனிப்பானது; மருத்துவப்பயன் உடையது. பண்ணை பிடித்து விரிந்து பெருகுவது; கூர்மையானதும் சொரசொரப்பும் அரிப்பும் உடையதாம்

இலக்கு (இலை)களையுடையது. 'கோரைக்கால்' என ஒரு கால்வாயும், அதனைச் சார்ந்த கோரைக்கால் என்னும் ஊரும், அவ்வூரில் வாழ்ந்து யானை, குதிரை, சீலை எனக் குறைத்துக் குறைத்து நடக்க விட்ட கருமி ஒருவன், 'கோரைக்கால் ஆழ்வான்' என்று ஔவையார் வசைக்கு ஆளானான்.

*"கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானாய்*
*எருதாய் முழப்புடவை யாகித் - திரிதிரியாய்த்*
*தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே*
*கோரைக்கால் ஆழ்வான் கொடை"* என்பது அவர்பாடல்.

வளர்ந்து நிமிர்ந்த கோரை குடிசை வீட்டுக் கூரைக்குப் பயன்பட்டது. கோரையில் உயர்ந்தது நாணல்! நெடிது வளர்வது. வலிய காற்றால் மரங்கள் மடமட எனச் சாய்ந்தாலும், தான் சாய்ந்து காற்று நின்றதும் நிமிர்ந்து பழைய நிலை கொள்வது. நாணல் புதல் போல் வெட்கத்தால் தலை தாழ்தல் 'நாணம்' எனப்பட்டது.

தம் புகழ் கேட்குங்கால் ஏற்படும் உயர்ந்த நாணமும், இயல்பாக அமைந்த பெண்மை நாணமும் சிறப்புக்குரியவை. இழிமைப்படுத்து தலை தாழ்தல் சிறப்புமிக்க நாணத்தோடு வைக்கக் கூடாதது. அஃது இழிமை நாணம்! தலை கவிழ்ந்து, கால்விரலால் நிலம் கிளைத்தல், கையொடு பிடிபட்ட களவாளன் நிலையெனக் கலித்தொகை கூறும்.

*"களவுடன் பட்டுக் கவிழ்ந்து நிலங்கிளைப்பர்"*

என்பது அது.

சோளத்தட்டை, கரும்பு என்பனவும் 'புல்' வகையினவே. சோளத் தட்டையின் உள்ளே பழுப்பு இருக்கும்; கனமும் வலிமையும் அற்றது. கரும்பினுள்ளும் சக்கை இருக்கும்; அதுவும் கனமும் வலிமையும் அற்றது. இவையும் குடிசைக்குக் கூரையாகப் பயன்படும்; மாடு யானை முதலியவை தின்பதற்கும் ஆகும். நாணற் பூவும் கரும்புப்பூவும் நனைந்த கொக்கின் இறகு போன்றது என்பது சங்கச் சான்றோர் உவமை.

நாணலினும் உயர்ந்ததும் நூற்றுக் கணக்கில் வேரில் இருந்து பண்ணை பிடிப்பதும் ஆகியது மூங்கில். நெடு நெடு என வளர்ந்து விடும்; கணுக்களில் இருந்து கிளைக்கவும் செய்யும். பச்சைப் பசேல் எனத் தோன்றும். அது முற்ற முற்றப் பொன்னிறமாக மாறும்; மூங்கில் வெளிவயிரம் உடையது; உள்ளே துளையமைந்தது. மூங்கிலில், பொத்தல் மூங்கில் கல்மூங்கில் என்பவை உண்டு.

கல் மூங்கில் வன்மையும் கெட்டித் தன்மையும் உடையது. கூரைவீட்டு வளை, கம்பு, வரிச்சு என்பவற்றுக்கும், வண்டி வாரிகளுக்கும் பயன்படுத்தப்படுவது. வண்டியின் இருப்புச் சட்டம் கல் மூங்கிலால் ஆயதே!

வண்டுகள் மூங்கிலைத் துளைத்துக் குடியிருக்கை ஆக்கிக் கொள்ளும். வண்டு ஒருவகை இசையொடு திரிவதால் 'மூசு வண்டு' என்பர். அதன் மூச்சுக் காற்றே இசையொலியாகிவிடும். அது 'மூம் மூம்' என்று மூசுதல் வழியாகத் துளையிடுதல் கொண்டு மூங்கில் எனப்பட்டது.

பசுமையாக இருக்கும்போது, நினைத்த வண்ணம் வளைக்க வளைபடலால் 'வளை' எனப்பட்டது.

மூங்கிலோடு மூங்கில் உராய்ந்து தீப்பற்றி வேதலால் 'வேய்' எனப்பெயர் பெற்றது.

*"வளைக்க வளைகின்ற வேய்"*

என்னும் தனிப்பாடலில் வளையும் வேயும் இடம்பெற்றன. அதன் சிறப்பு,

*"மன்னர் மணிமுடியின் மேலாம்"*

எனப்பட்டது. வளையும் மூங்கில் சிவிகையாகச் சிறக்கின்றது. அதில் செல்வமிக்கார் அமர்ந்து சென்றமை பண்டே உண்டு என்பது,

*"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை*
*பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை"*

என்னும் வள்ளுவத்தால் அறியப்பெறும்.

சிவிகையைத் தூக்குதலும், அதன் மேலூர்ந்து செல்லுதலும் அறச்செயல் அன்று. சிவிகை தூக்குபவன் பாவி அல்லன்; மேலிருப்பவன் அறவன் அல்லன்! அவன் அறவன், துறவன், அந்தணன் எனின், "மனிதன் நோக மனிதன் செய்யான்" என்று கண்டித்தது இப்பாட்டு.

மூங்கில் முற்றின் வளையாது. அது கழைக்கூத்து நிகழ்த்தவும், கழை தாவல் தாவவும் பயன்படும். 'கழை' என்பதும் மூங்கிற்கு ஒருபெயர்.

மூங்கில் பண்ணை திரளலால் 'பண்ணை › பணை' ஆகியது.

பணை யாவது மூங்கிலின் மற்றொரு பெயர்.

மூங்கிலில் வண்டு துளைத்துக் குடியிருப்பு ஆக்கிய துளையின்வழி 'காற்று'ப் புகுந்து ஒலி எழுப்பியது. இதனைக் கேட்ட கூர்ந்த செவியன், இதனை எடுத்து நாமும் காற்றை ஊதினால் இசையுண்டாகுமே என எண்ணினான். துளையிட்டான்; ஊதி இசைத்தான். துளை இடப்படாதது அடுப்பு ஊதும் குழல் ஆயிற்று. துளையிட்டு அடைத்தும் திறந்தும் வாயால் காற்றை எழுப்பி, கைவிரலால் துளையை அடைத்துத் திறந்து இசைகண்டான். அவ்வாறு பிறந்ததே 'குழல்' என்னும் இசைக்கருவி. யாழுக்கும் வீணைக்கும் முற்பட்ட இசைக் கருவியாயிற்று அது. அதன் பெயரைப் 'புல்லாங்குழல்' என்றனர் பொதுமக்கள். புலமக்கள் குழல் என வழங்கினர்.

*"குழல் இனிது யாழினிது"* என்றார் வள்ளுவர்.

*"குழல் கொடு ஊதின போது"* என்றார் பெரியாழ்வார்.

மூங்கில் 'முல்லை' நிலமாம் காட்டுக்கு உரியது. முல்லை நிலக் குழல் இசை 'முல்லைத் தீம்பாணி' எனச் சிறப்பான இசை நிலைபெற்றது. விரும்பத்தக்க இசையினது குழல் ஆதலால், 'வேணு' என்னும் பெயரும் பெற்றது. மூங்கில் வரை வரையாக இருந்ததால் 'வரை' எனப் பெயர் பெற்றது.

ஒருவர் நிலத்துக்கும் மற்றொருவர் நிலத்துக்கும் வரை (எல்லை)யாகவும் அமைந்தது.

மிகப்பெரிய மூங்கில், அதில் சிறியது, அதிலும் சிறியது என்று அமைந்த மூங்கிலைக் கணுவுக்குக் கணுவாக அளவுபடுத்தி வெட்டி அளவு கருவியாக்கினர்.

மரக்கால், நாழி, உழக்கு என்னும் முகத்தலளவைப் பெயர்கள் மூங்கில் வழிவந்தவை. 'நாழி' என்பதும் மூங்கிலின் ஒருபெயர். மரம் புல் வேறுபாடு கருதாமல் மூங்கிலையும் மரம் எனக்கொண்ட பொதுமக்கள் 'மரக்கால்' என்று வழங்கினர்.

நாழி உரி என்பவை 'நாவுரி' என வழங்கும் இலக்கணமும் உண்டானது.

*"நாவிய கடுகு வேண்டும்; நாவுரி தானும் வேண்டும்"*

என்பது ஆசியசோதி.

முகத்தல் அளவைக்குப் பயன்பட்ட மூங்கில் நீட்டல் அளவைக்கும் பயன்பட்டது.

அணு எட்டு கொண்டது ஒரு துகள் (தூள்).

துகள் எட்டு கொண்டது ஒரு எள்

எள் எட்டு கொண்டது ஒரு நெல்

நெல் எட்டு கொண்டது ஒரு விரல்

விரல் இருபத்துநான்கு கொண்டது ஒரு கோல்

எண்கோல் நீளம்; ஏழு கோல் அகலம்; ஒரு கோல் உயரம் என அரங்கம் அமைக்கப்பட்டது என்றும் சிலப்பதிகாரத்தால் மூங்கில் அளவைக் கோலானது புலப்படும் (அரங்கேற்று காதை உரை)

*"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்*
*கோல்அளவு இருபத்து நால்விரல் ஆக*
*எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து*
*ஒருகோல் உயரத்து உறுப்பினது"* *(99-103)*

மூங்கில் பயன்பாடு சேரலத்தில் அறியலாம். அசாம் மாநிலமோ, மூங்கில் மாநிலம் எனத் தக்கதும் பயன்படுத்தலும் உடையதாம். எங்கும் மூங்கில் எல்லாம் மூகில்" என்பது அசாமியப் பண்பாடும் நாகரிகமும் வாழ்வியலும் தொழிலும் ஆம்!

முல்லை வளம் புல், செடி, கொடி, மரம் நிரம்பியது. ஆடு, மாடு, மான், மரை, புலி முதலியவும் வாழ்வது. ஆதலால் ஆங்கு வாழும் ஆயர் மூவகையர் ஆகினர். ஆடு மேய்ப்பார் புல்லினத்து ஆயர். ஆன் உடையவர் கோவினத்து ஆயர். எருமை உடையவர் கோட்டினத்து ஆயர் என்பார் அவர். எருமைக் கொம்பின் வலிமை கருதி 'கோட்டினம்' எனப்பட்டதாம்.

புல்லை உணவாகக் கொண்டது ஆடு மாடு மட்டுமா? மான் மரையும் புல்லுணவு கொள்வனவே! அதனால், மானுக்குப் 'புல்வாய்' என ஒரு பெயர் உண்டானது.

*"ஆடு துறையில் ஆடுபுலியும் புல்வாயும்*
*கூடநீர் ஊட்டிய கொற்றவன்"*

என மூவருலா 'மாந்தாதா' என்பவன் புகழ்பாடியது. முகவை மாவட்டத்துப் 'புல்வாய்க்கரை' என்பதும், புல்வாய்ப்பட்டி (புல்லாப்பட்டி) என்பதும் எண்ணத் தக்கவை.

பொருந்திய உணவு 'புல்லுணவு', ஏனெனில் புல்லுதல் பொருந்துதல். பொருந்தா உணவு 'புலால்' (புல் + ஆ+ஆல்) ஆ=எதிர்மறை. புலால் உணவு வல்லுணவு, வல்சி எனப்படும் 'வள்பு' என்பது தோல். மறைமலையடிகளார் எழுதிய நூல்களுள் ஒன்று. "பொருந்தும் உணவும், பொருந்தா உணவும்'" என்பது!

மருந்து என்னும் அதிகாரத்தில் மருந்தென வேண்டா என்ற வள்ளுவர், "மாறல்ல துய்க்க", "மாறுபாடு இல்லாத உண்டி" என்றதுடன், புலால் மறுத்தலில், "உண்ணாமை வேண்டும் புலாஅல்" எனத் தெளிவித்தார்.

"புல்லுணவு எனினும் வல்லுணவு எனினும் ஆக; இல்லுணவே வேண்டும்" என்றது ஒருவர் அஞ்சல் எழுத்து.

உணவை அன்றி நிலத்தையும் இரண்டாகப் பகுத்தனர்; அவை வன்புலம் புன்புலம் என்பன. வன்புலம் (அ) வன்னிலம் என்பது, மலையும் காடுமாம் குறிஞ்சியும் முல்லையும்; புன்புலம் (அ) மென்னிலம் என்பது, வயலும் கடற்கானலுமாம், மருதமும் நெய்தலுமாம். நானிலம் தோன்றிய பின்னர் நாகரிக மிக்க மருதநிலத்தையும் இரண்டாகப் பகுத்தனர். அவை நன்செய் (மிகப் பண்படுத்தப்பட்டது) புன்செய் (சிறிதே பண்படுத்தப்பட்டது) என்பன.

அவலத்தின் அடையாளம் அழுகை; பெருகநீர் வழிவது

அன்பின் அடையாளம் மகிழ்வு; புன்கணீர் கசிவது;

***"இழிவே இழவே அசைவே வறுமையென***
***விளிவில் கொள்கை அழுகை நான்கே"***

என்பது தொல்காப்பியம்.

***"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்***
***புன்கணீர் பூசல் தரும்"***

என்பது வள்ளுவம்.

'நகை' என்பது மெய்ப்பாடு எட்டனுள் தலைப்பட்டது. நகையாவது சிரிப்பு. நகைச்சுவை என்பது அது. பெருகச் சிரித்தல் அளவே சிரித்தல். மெல்லென இதழ் மலர்ச்சி காட்டல் என மூன்றாகப் பகுப்பர். மெல்லென இதழ்மலரச் சிரிப்பு வெளிப்படுத்துதல் புன்னகை எனப்படும். "புன்னகைக்கு இணையான பொன்நகை எதுவும் இல்லை" என்பது மக்கள் வழக்கு.

தொடர்வோம்.

# சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீஸ்

**பேராசிரியர் முனைவர் கா.அரங்கசாமி**
தாராபுரம்

கிரேக்க நாட்டின் மிகச்சிறந்த தத்துவ மேதையாகக் கருதப்பெறுகின்ற சாக்ரட்டீஸ் மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை கல்வேலை செய்யும் ஒரு தொழிலாளி. தாய் தாதியாகப் பணியாற்றி வந்தவர். எனவே இளம் வயது முதல் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சாக்ரட்டீஸ் தமது வாழ்நாள் முழுவதும் அங்ஙனமே வாழ்ந்து வந்தார். அவர் தமது தோற்றத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை! நைந்த அழுக்கடைந்த ஆடைகளோடும் தூய்மையற்ற மேனியோடும் அவர் என்றும் காணப்படுவார். பொதுவாக நமது சித்தர்கள் எங்ஙனம் தமது உடை, உருவம் முதலானவை குறித்துக் கவலையற்றிருந்தார்களோ அப்படி இருந்தவர் சாக்ரட்டீஸ். மிகுந்த ஏழையாகவே வாழ்ந்து வந்தார்.

சாக்ரட்டீஸ் பற்றி அவருடைய தலைசிறந்த மாணவராகிய பிளேட்டோவின் எழுத்துக்களிலிருந்தே தெரிந்து கொள்ளுகின்றோம். அவரது படைப்புக்களாக எதுவும் இல்லை. தமது கருத்துக்களை விவாதங்களின் மூலமே நிறுவி வந்தார். எப்பொருளைப் பற்றிப் பேசினாலும் அதனைத் தம் முன் இருப்பவருடன் விவாதமாகவே கொண்டு செல்வது சாக்ரட்டீஸின் இயல்பு. தம்மோடு விவாதிக்கும் ஒருவரைத் தமது அறிவார்ந்த கேள்விகள் மூலமே விடைகூற வைத்து, எடுத்துக்கொண்ட பொருளைப் பற்றிய முடிவை அவர் வாயிலாகவே வரவழைக்க வைப்பது சாக்ரட்டீஸின் உத்தியாகும். இங்ஙனம் வினாவிடையாகவே சாக்ரட்டீஸ் தமது கோட்பாடுகளால் ஏதென்ஸ் மாநகர இளைஞர்களை ஈர்த்து வந்தார்.

கிரேக்கர்கள் ‘டெல்பி’ என்ற இடத்தில் கூறப்படும் வார்த்தைகளை, அப்பல்லோ தெய்வத்தின் வார்த்தைகளாகவே நம்பி வந்தனர். ஆனால் அறிவுப்பூர்வமான காரணகாரியத்தோடு கூடியவற்றையே ஏற்பவராகச் சாக்ரட்டீஸ் இருந்து வந்ததால் ‘டெல்பி’யில் கூறப்பெறும் ‘ஆரக்கிள்’ என்ற தெய்வவாக்காகப் பிறரால் கருதப்படுகின்றதனை முழுமையாக ஏற்கவில்லை.

இறை வாக்காகப் பிறர் நம்பும் ‘டெல்பியின்’ வார்த்தைகளையும் அவர் அறிவுப்பூர்வமான சோதனைக்கு உட்படுத்தினார். எனில் தெய்வீகம் பற்றிய அவரது நிலை மெய்யுணர்தலாகும்.

“தானும் பிறரும் ஒரு பொருளைப் பற்றி விவாதித்து ஆராயாமல் ஒருநாள் கழியுமாயின் அதுவெறுமையான நாளாகும். இத்தகு ஆராய்ச்சி இல்லாமல் வாழ்கின்ற வாழ்க்கை பயனற்றது” எனச் சாக்ரட்டீஸ் கூறுவதனைக் காண்கின்றோம். விதண்டாவாதமாக வல்லடி வழக்காடுவதன்று அவர் கூறுவது, ஒருமனிதன் தான் பெற்ற அனுபவங்களிலிருந்து பெற்ற கருதுகோள்களின் தகுதிகளை அறிவு சான்ற விவாதமெனும் ஆய்வுநிலையில் புடமிட்டுப் பார்ப்பதாகும். அங்ஙனம் ஆராய்ந்து தெளிவடையாத வாழ்க்கை பயனற்றது

என்பதே சாக்ரட்டீஸின் கொள்கையாகும்.

மரபான கண்ணோட்டத்திலிருந்து 'தெய்வீகம்' பற்றிய அவரது கொள்கை மாறுபட்டது. எடுத்துக்காட்டாக 'டெல்பியின் தெய்வக்கூற்றை' மற்றவர்களைப் போல அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அதில் பொதிந்துள்ள உட்பொருளைக் காணுகின்றார். ஓரிடத்தில் அவர் குறிப்பிடுகின்றார்; "நண்பர்களோ பிறரோ யார் எதனைக் கூறினாலும் நான் அதனை அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை அது அறிவார்ந்ததுதானா என ஆய்வது என்னுடைய இயல்பாகும்."

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு"*

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கு கிரேக்க மேதையின் வார்த்தைகளோடு ஒத்துப்போகவில்லையா?

சாக்ரட்டீஸ் தாம் எந்த ஞானத்தையும் தமது விவாதங்களின் மூலம் பிறருக்குத் தருவதில்லை என்றும் தாம் தமது விவாதங்களின்போது ஒரு 'பேறுகாலத்தாதி' போலச் செயல்படுவதாகவும் கூறுகின்றார். ஒரு பொருள் பற்றிய முழுமையான அறிவு போதிப்பதால் வருவதல்ல! ஆனால் விவாதங்களின் மூலமே அதனை ஒருவர் பெற முடியும். "ஒருவர் தாம் முழுமையான நன்மை என்ன என்பதைப் புரிந்து கொண்டதாகக் கூறினால், நான் அதனை எனது வினாக்களின் மூலம் அவர் கூற்றை ஆராய்ந்த பின்பே ஏற்றுக்கொள்வேன்" என்கிறார் சாக்ரட்டீஸ். அவர் தம்முன் விவாதிப்பது ஆண்டியாயினும் அரசராயினும் ஒரே விதமாகத்தான் நடத்துவார்.

ஒருமனிதன் உண்மையாகவே ஒழுங்குயர்வுத் தகுதியுடையவனாக இருந்தால் மட்டுமே அதனை அவன் புரிந்து கொள்ள முடியும். சாக்ரட்டீஸைப் பொறுத்தவரை அவர் அனைவரும் சமம் என்ற கொள்கையுடையவர். அதனால் அவர் ஒருவரின் புரிதல்பற்றியும் ஒழுங்கு பற்றியும் சரியாக அணுக முடிந்தது. அவர் தமது முழுநேரத்தையும் மக்களை வழிப்படுத்துவதிலேயே செலவிட்டார். அவர் முன்னால் இருப்பது இளைஞனாகவோ முதியவனாகவோ இருக்கலாம். ஆனால் அவர் அவர்களது உடல்தகுதி, பொருள்தகுதி ஆகியவை பற்றிக்கவலை கொள்ளாமல் அவர்களது ஆன்ம மேன்மைக்காகவே பாடுபட்டார். செல்வம் ஒருவருக்கு நன்மையைக் கொண்டு வராது. ஆனால் நன்மை அவருக்குச் செல்வத்தையும், ஆசிகளையும் வழங்கும். இவ்வுண்மை தனிமனிதனுக்கு மட்டுமல்ல ஒருநாட்டிற்கும் பொருந்தும் என்பது சாக்ரட்டீஸின் கொள்கை.

எனவேதான் அவர் மக்களை நல்வழிப்படுத்தும் வழியினை மேற்கொள்ள வேண்டுவதாயிற்று. அதன் மூலம் ஆத்தீனியர்களுக்குப் பெரும் சேவை செய்யும் தகுதியை அவர் பெற்றார்.

சாக்ரட்டீஸ் பெரும் சிந்தனையாளர், தாம் ஆராய்வதற்கு எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய ஒரு முழுமையான தெளிவு கிடைக்கும் வரையிலும் அவர் நகருவதில்லை. ஒருநாள் போருக்குப் புறப்படுவதற்கு முன்பு புலர் பொழுதில் அவர் சிந்தனை வயப்பட்டு நின்றுவிட்டார். வீரர்கள் திரும்ப வந்த

போதும் அவர் நின்ற இடத்திலிருந்து அசையாமல் நிற்பதைக் கண்டார்கள். மறுநாள் பொழுது விடியும் வரை அவர் அவ்விடத்திலேயே நின்றிருந்தாராம். அவரது நண்பர்கள் கூறியதாகப் பிளாட்டோ குறிப்பிடுகின்றார்.

சிந்தனை வயப்படும்பொழுது அவர் எவ்விடத்திலிருந்தாலும் அவ்விடத்திலேயே நின்று விடுவது அவர் வழக்கமாகும். இது தவிர அவரது உற்ற நண்பர்களின் கூற்றுப்படி அவர் குளித்துத் தம்மைத் தூய்மை செய்து கொள்வது, நல்ல உடைகளைப் போன்ற செயல்களை அவரிடம் காண்பது அரிதாகும். அவர் எப்பொழுதும் அழுக்கடைந்தும், தலைவாராமலும் காணப்படுவார். அவரிடம் எப்பொழுதும் பணம் இருக்காது, அத்துடன் அடுத்த வேளை உணவு எங்கிருந்து கிடைக்கும் என்ற கவலையும் அவருக்கு ஏற்படுவதில்லை. குடிப்பழக்கம் அவரிடம் இல்லை. மற்றவர்களைத் தம்மைப்போல் எளிமையாக வாழும்படி அவர் வற்புறுத்துவதும் இல்லை. மற்ற மனிதர்களைப்போல் அவர் வாழவில்லை. செல்வமும் செல்வாக்கும் ஏனையவர்க்குத் தேடுதற்குரியவையாக இருக்கச் சாக்ரட்டீஸ் அவற்றைப்பற்றியே கவலையே இல்லாமல் அறிவுச் செல்வத்தைத் தேடுவதிலும், அதனைப் பிறர்க்குக் கொடுப்பதிலுமே கவனமாக இருந்தார். ஞானத்தைத் தேடுகின்ற மனிதனுக்கு உலகியல் பொருள்கள் அற்பமாக இருப்பது இயல்பு. பெரும்பாலான நேரங்களில் அவர் பிறரோடு உரையாடுவதையே மிக இன்றியமையாததாகக் கருதினார். அவரோடு உரையாடுவது ஓர் இனிய அனுபவமாக உரையாடுவோர் உணர்ந்தனர்.

ஆல்சிபியாடிஸ் என்ற போர்வீரர் சாக்ரட்டீஸின் பேச்சைப்பற்றி, அவருடைய பேச்சானது நதி தேவதையான 'மார்சயா' சினுடைய குழலோசை எங்ஙனம் மனிதர்களை மயக்குமோ அங்ஙனம் மயக்குவதாக இருக்கும்" எனக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர், "சாக்ரட்டீஸின் எளிய வார்த்தைகள் இசைக் கருவிகளைப் போல் இன்பமளிப்பன. ஆனால் அவை கவிதைகள் அல்ல" எனப் பாராட்டுகின்றார். அத்தோடு அவருடைய பேச்சுக்கள் என்னை முழுமையாகத் தம் வயப்படுத்தி விடுகின்றன. அவர் பேசுவதைக் கேட்கும்போது எனக்குள் ஓர் உணர்வுக் கொந்தளிப்பு ஏற்படுவதுடன் கண்ணீரையும் வரவழைத்து விடுகின்றது. இந்த அனுபவம் என் ஒருவனுடையது மட்டுமல்ல, பலருடையதும் ஆகும். நான் அரசியலில் ஈடுபடும் பொழுது நான் கவனிக்க வேண்டிய எனக்காகக் காத்துக்கிடக்கின்ற முக்கியமான பிரச்சினைகளைக் கூட அவருடைய பேச்சைக் கேட்பதற்காக ஒதுக்கி வைத்து விடுகின்றேன்" என ஆல்சிபியாடிஸ் தனது அனுபவங்களை வெளிப்படுத்துகின்றார்.

சிறந்த சிந்தனையாளரும், அறிவார்ந்த தர்க்கவாதியும், எப்பொருளாயினும் அப்பொருளின் உண்மையினைக் கண்டறியும் வேட்கை யுடையவருமாகிய சாக்ரடீசை ஒரு குற்றவாளியாகப் பார்க்கப்படும் நிலை ஏற்பட்டது. அவர் மீது கி.மு399-ல் ஏதென்சில் வழக்குத் தொடரப்பெற்றது. அப்பொழுது அவருக்கு வயது எழுபதை நெருங்கிக் கொண்டிருந்தது. புதிதாகப் பொறுப்பேற்ற மக்களாட்சி மன்றம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய நிலையிலிருந்ததால் சாக்ரட்டீஸ் வேண்டப்படாதவராகக் கருதப்பட்டார். அதற்குக் காரணமும் இருந்தது.

இருபத்தேழு ஆண்டுகள் நடைபெற்ற உள்நாட்டுப் போராகிய 'பெலப்பனோசியப்போர்' கி.மு. 404-ல் தான் ஒரு முடிவுக்கு வந்தது. கிரேக்கம் இரு அணியாக நின்று அப்போரில் ஈடுபட்டது. ஓர் அணிக்கு இராணுவக் கட்டுப்கோப்புடைய ஸ்பார்ட்டா தலைமையேற்றது. மறு அணிக்குச் சுதந்தரப்பிரியர்களும், கலைகளில் நாட்டமுடையவரும், கடற்போரில் வல்லவர்களுமான ஆத்தீனியர் தலைமையேற்றனர். பாரசீகர் கிரேக்கத்தின் மீது தாக்குதல் நடத்தியபோது முந்நூறு ஸ்பார்ட்ட வீரர்கள், 'தெர்மோபைல்' என்ற இடத்தில் லட்சக்கணக்கான பாரசீகப் படையினரைப் பல நாட்கள் தடுத்து நிறுத்திய வன்மையுடையவர்கள். அதேபோல் 'சலாமிஸ்' என்ற இடத்தில் நடைபெற்ற கடல்போரில் 'தெமிஸ்டோகிளிஸ்' என்பவரின் தலைமையிலான ஏதென்சின் கப்பற்படை பாரசீகரின் பெரும் கப்பற்படையை வென்றது. அன்றுமுதல் கிரேக்கத்திற்குத் தலைமைதாங்குவது ஸ்பார்ட்டாவா, ஏதென்சா என்ற போட்டி தொடங்கி அது உள்நாட்டுப் போராக இருபத்தி ஏழு ஆண்டுகள் நடைபெற்றுக் கிரேக்க 'நகர அரசு'களைத் தளர்வடைய வைத்தது.

இங்ஙனம் தளர்ச்சியடைந்த அரசுகளில் முதன்மையானது ஏதென்சாகும். தோல்விக்குக் காரணம் 'குடியரசே' எனத் தீர்மானித்த ஆத்தீனியர்களில் பலர் முப்பது பேரடங்கிய குழுவிடம் ஆட்சியை ஒப்படைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஸ்பார்ட்டர்களால் உந்தப்பெற்றனர். ஆனால் அவர்கள் கொடுங்கோலர்களாகி ஏதென்சை நரகமாக்கினர். அவர்களின் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த ஆத்தீனியர்கள் மீண்டும் குடியாட்சிக்கே திரும்பினர். குடியாட்சி தன்னை நிலை நிறுத்திக் கொள்ளப் பாடுபட்டபோது அதனைப் பலவீனப் படுத்துவதுபோல் சாக்ரட்டீஸின் செயல்கள் இருப்பதாகப் பலரும் கருதினர். ஸ்பார்ட்டாவால் திணிக்கப்பெற்ற 'முப்பதின்மர்' ஆட்சி ஓராண்டிற்குள்ளாகவே மக்களில் அநேகரைக் கொன்றது. அதனை அகற்றிய ஆத்தீனியர்கள் கி.மு. 401-ல் ஓரளவிற்குக் குடியாட்சியை நிலைப்படுத்தினர் என்றாலும் கி.மு. 399-லுங்கூட அதற்குப்போதிய பாதுகாப்பு இல்லை என்றே கருதினர். இவ்வாண்டில்தான் சாக்ரட்டீஸ் மீது வழக்குத் தொடரப்பெற்றது. போரில் 'ஏதென்ஸ்' தோற்றதற்குக் காரணங்களில் ஒன்று அறிஞர்கள் ஆத்தீனியர்களின் மரபு வழியான கொள்கைகளையும் மதிப்பீடுகளையும் ஆராய்ச்சி என்ற பெயரில் குறைத்துப் பலவீனப்படுத்தியதேயாகும் எனக் கருதப்பெற்றது. இத்தகு செயலையே சாக்ரட்டீஸும் செய்கின்றார் என்ற கருத்து உருவாகியது.

சாக்ரட்டீஸ் மீது மூன்று குற்றங்கள் சுமத்தப்பெற்றன. 1. அவர் நாடு ஏற்றுக்கொண்டுள்ள கடவுளர்களை ஒப்புக்கொள்ள மறுக்கின்றார். 2. புதிய கோட்பாடுகளைப் புகுத்துகின்றார். 3. இளைஞர்களைக் கெடுத்துத் தகுதியற்றவராக்குகின்றார். இக்குற்றச்சாட்டுகளின் பின் அரசியல் இருந்தது. அரசியல், சமயம், கல்வி என்பவற்றை மையமாகக் கொண்டு தொடுக்கப்பெற்ற இவ்வழக்கு முழுவதும் அரசியல் நோக்கமுடையதே. இதற்குக்காரணம் தவறானகாலத்தில் தவறுகளைத் தவறு என்று சுட்டுவதும் உண்மைகளை அவர் பேசியதுமாகும்.

சாக்ரட்டீஸின் வழக்கை விசாரித்து முடிவுகூற 500 குடிமக்கள்

கூடியிருந்தனர். அவர்கள் அரிஸ்டோபனிஸ் என்ற நாடகாசிரியன் தன்னைத் தவறாகச் சித்திரித்திருந்தைக் கருத்தில்கொண்டு தீர்ப்பளிக்க முன்பே முடிவுசெய்திருப்பதைச் சாக்ரட்டீஸ் தெரிந்திருந்தார். எனவே அவர்களுடைய அத்தவறான கருத்தினை மாற்றுவதற்குத் தமது வழக்கின் எதிர் வாதத்தின் மூலம் முயன்றார். அவருடைய மாணவரான பிளேட்டோவும் வழக்குமன்றத்தில் இருந்தார். சாக்ரட்டீஸின் எதிர்வாதத்தினை (Apology or defense - speech) சில ஆண்டுகளுக்குப்பிறகு அவர் எழுதினார். அதில் சாக்ரட்டீஸ் கூறிய வார்த்தைகளை அப்படியே எழுதினார் என்பதைக் காட்டிலும் உண்மையான சாக்ரட்டீஸை வெளிப்படுத்தப் பெருமுயற்சியை மேற்கொண்டார் எனக்கூற வேண்டும். பிளேட்டோவின் முதற்படைப்பே இதுவாக இருக்கலாம். இதன்மூலமே சாக்ரட்டீஸ் என்ற தத்துவப் பேராசானை நாம் புரிந்து கொள்ள முடியும். இதனையே தத்துவ இயல் வரலாறும் மேற்கொள்ளுகின்றது.

இளைஞர்களைக் கெடுத்து அவர்களைத் தகுதியற்றவர்களாக மாற்றுகின்றார் என்ற குற்றச்சாட்டிற்கு அவர், "ஒருவரை நாம் கெடுப்ப தென்பது அவருக்குக் கேடு செய்வதாகும். அங்ஙனம் கெடுதலுக்கு ஆளானவர் நமக்குத் திரும்பக்கெடுதல் செய்வார்களல்லவா?" எனக்கேட்டார். இவ்வாதமானது எவரையும் திருப்திப் படுத்துமாறு அமையவில்லை.

தாம் யாரிடமும் பணம் பெற்றுக்கொண்டு போதிப்பதில்லை என்றும், ஆனால் அரிஸ்டோபனிஸ் தம்மை, பணம் பெற்றுக்கொண்டு பேசும் தொழில்முறைப் போதனையாளர்களாகிய உலகியல் வாதிகளோடு சேர்த்துத் தவறாகக் கணித்திருப்பதாகவும் சாக்ரட்டீஸ் கூறுவது உண்மையாகும். "பிறரோடு விவாதித்து உரையாடுவதால் அவர்களின் உபசரிப்பை ஏற்றுக்கொள்வதல்லாமல் வேறு எவ்விதப் பணப் பயனையும் பெருக்கிய தில்லை" எனவும் அவர் குறிப்பிடுகின்றார். மேலும் 'ஆத்தீனியர்களுக்குத் தம்முடைய தத்துவக் கேள்விகளின் மூலம் பயன்பெறுமாறு அறிவுறுத்தியும், தவறானவற்றை எதிர்த்து விவாதித்து வெற்றி பெறுவது எங்ஙனமென்று கூறியும் நன்மை செய்வதை அவர்கள் அறியாமல் தம் மீது சினந்துள்ளமையால் தாம் தமது வாழ்க்கைக்காக இவ்வழக்கைச் சந்திக்க வேண்டியுள்ளது எனத்தமது வாதத்தினை முன் வைக்கின்றார். இதுவே அவரது எதிர்வாதத்தின் அடிப்படையாகும்.

வழக்கின் முடிவு இன்னதெனச் சாக்ரட்டீஸ் ஊகித்துவிட்டதால் அவர் தமது எதிர்வாதத்தைப் பொதுப்பேச்சுப்போல் நிகழ்த்தினார். "என் மீது கிரீட்டஸும் மற்ற மாணவர்சிலரும் ஒழுக்கத்தகுதி அற்றவர்களாக இருப்பதனால் வழக்குத்தொடர்ந்துள்ளனர், ஏனெனில் அவர்களுக்கு ஒழுங்குயர்வு என்ன என்பது புரியவில்லை. மேலும் இதுபற்றி நாம் விவாதித்து அறிவோமானால் அவர்கள் நியாயம் என்ன என்பதனை உணர்வார்கள். என்னுடைய விவாதங்களின் மூலம் நான் ஒழுக்கநெறிகளையே கூறி வந்துள்ளேன் என்பதனை ஆராயாமல் தீர்ப்பளிப்பது சரியன்று" எனச் சாக்ரட்டீஸ் வாதிட்டார். எனினும் இத்தகு வாதமே கிரீட்டஸ் முதலானவர்களை மேலும் சாக்ரட்டீஸுக்கு எதிரானவர்களாக மாற்றியது.

அரிஸ்டாட்டில், சாக்ரட்டீஸ் பற்றிக்கூறும்போது, "அவர், ஆன்ம நம்பிக்கையினின்றும் விலகியதால் அவர் ஒருவருடைய உணர்வு மற்றும் இயல்பினின்றும் விலகிச்சென்றார். அவர் மனிதர்களின் செயல்களையும் உணர்வுகளையும் அறிவுபூர்வமாகவே அணுகினார். அதனால் அவர்களின் உணர்வுகளையும் நம்பிக்கைகளையும் அவர் கண்டு கொள்ளவில்லை" எனக்கூறுகின்றார். அரிஸ்டாட்டில் 'கலைக்களஞ்சியப் பேரறிவாளர்' எனப் பாராட்டப் பெற்றவர். பிளேட்டோவின் மாணவரான அவர் மகா அலெக்சாந்தரின் ஆசிரியருமாவார்.

அரிஸ்டாட்டிலின் இக்கருத்து எவ்வளவிற்குச் சரியானதென்பதைக் கூற முடியவில்லை. ஏனெனில் சாக்கரட்டீஸ் தமது எதிர்வாதத்தில் கூறுவதிலிருந்து அவரது கொள்கை ஆன்மாவில் தொடங்கி அதனிலேயே முற்றுப்பெறுகின்றது. "வாழ்வின் மிக முக்கியமானது ஆன்மாவிற்கு நன்மை செய்தலேயாகும். தவறானசெயல்களினால் ஆன்மா முடக்கப் பெறுகின்றது, ஆனால் நற்செயல்கள் அதற்கு ஆக்கமளிக்கின்றன" எனச்சாக்ரட்டீஸ் கூறுகின்றார். அவர் தமது செயல்களில் எவ்விதத் தவறையும் காணவில்லை. எனவே அவர் நீதிமன்றத்தில் அச்சமின்றி நின்றார். அவர் தம் தகுதிக்குக் குறைவேற்படுமாறு வளைந்து கொடுக்கவில்லை. அங்ஙனம் சற்று விட்டுக்கொடுத்திருந்தால் ஒருவேளை மரண தண்டனையிலிருந்து தப்பித்திருக்கலாம். வாழ்வின் இறுதிக்கட்டத்தில் நிற்கும் அவர், "வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்" என்ற சங்க காலப் புலவன்போல, சிறிதுநாள் உயிர்வாழ்வதற்காகத் தம் தகுதியை விட்டுக்கொடுக்காமல் நீதிமன்றத்தில் நின்று தண்டனையை ஏற்றார். 500 ஆத்தீனியக் குடிமக்களில் பலர் அவருக்கு எதிராக வாக்களித்தனர்.

இயற்கையாக வரும் மரணத்தை எதிர்பார்க்கும் வயதில் இருந்த அவர் மரணதண்டனை பற்றிக் கவலைப்படவில்லை. நன்மையும் பயனுள்ளதுமான வாழ்க்கை வாழ்ந்தற்காக அவர் பெருமைப்பட்டார். பொதுவாக மரணத்தை நினைத்து அவர் அச்சங்கொள்ளவில்லை! "ஒருவர் அறிவாளியா இல்லையா என்பதை அவர் மரணத்தைக் கண்டு அஞ்சுபவரா இல்லையா என்பதைக் கொண்டு தீர்மானிக்கலாம். எவ்விதத்திலும் மரணத்தைப்பற்றி யாருக்கும் தெரியாது. அது மனிதனுக்கு ஏற்படும் ஆன்ம இன்பமாக இருக்கலாம். ஆனால் மக்கள் அதனைப் பெரும் தீமையாகக் கருதுகின்றனர். இது பெரும் அறியாமையாகும். நான் கூட மரணத்திற்குப் பிறகு என்ன வரும் என்பதை அறியாமலேயே இருக்கின்றேன். இருப்பினும் நான் மரணம் வருவதை நினைத்து அஞ்சவில்லை" எனச் சாக்ரட்டீஸ் கூறுவது, "சாதலும் புதுவதன்றே" என மரணத்தைப் பற்றி மிகச்சாதாரணமாகக் கூறுகின்ற கணியன்பூங்குன்றனுடைய அழியாப்பாடலின் அடி நமக்கு நினைவுக்கு வருகின்றதல்லவா?" இதனையே உறையூர் முதுகண்ணன் சாத்தனார், "தேய்தல் உண்மையும் பெருகல் உண்மையும், மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும் அறியாதோர்" மக்கள் என்பதைச் சுட்டிக்காட்டவில்லையா? காலங்கள் வேறானாலும் சான்றோர் சிந்தனைகள் ஒன்றாகவே இருக்கின்றன என்பதனை உணரமுடிகின்றது.

ஒரு சமயம் யுதைபுரோ என்பவர் தமது தந்தை ஒரு அடிமையைக் கொன்றுவிட்டார் என அவர்மீது வழக்குத் தொடர்ந்தார். மகனே தந்தையைக் குற்றவாளியாக வழக்குத் தொடுப்பது அவரது குடும்பத்தார்க்குப் பிடிக்கவில்லை. எனினும் தந்தையேயாயினும் கொலைக்குற்றத்திற்காக அவர் மீது வழக்குத் தொடுப்பது ஒரு புனிதமான செயலே என யுதைபுரோ நினைத்தார். இதனைக்கேட்ட சாக்ரட்டீஸ் மிகவும் வியந்தவராக அவரைச் சந்தித்தார். குடும்பத்தார் அறியாமையால் தம் செயலை எதிர்ப்பதாகவும் ஒரு கொலைக் குற்றவாளிக்கெதிராகத் தான் நிற்பது புனிதமானது எனவும் அவர் உறுதியாகக் கூறினார். அவரது நியாய அறிவை மதித்த சாக்ரட்டீஸ், அவர் எது புனிதமானது என முடிவாக அறிந்துள்ளாரா என வினவினார். அதற்கு, யுதைபுரோ, "கடவுளர் எதைவிரும்புகின்றார்களோ அதுவே புனிதமானது" எனக்கூறினார். அதற்குச் சாக்ரட்டீஸ், "பொதுவாக நமது கடவுளர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் கருத்துவேற்றுமையும், ஒருவர் விரும்புவதை இன்னொருவர் வெறுப்பவருமாக இருக்கின்றதாக அறிகிறோம். அப்படியானால் புனிதமானது எதுவெனக்கூற முடியும்?" எனக் கேட்டார். யோசித்த யுதைபுரோ தமது முதல் கருத்தை மாற்றிக்கொண்டு அனைத்துக் கடவுளர்களும் எதனை விரும்புகின்றனரோ அதுவே புனிதமானது என்ற முடிவுக்கு வந்தார். இப்பொழுது சாக்ரட்டீஸ், "கடவுளர்கள் விரும்புவதால் ஒன்று புனிதமாகின்றதா அல்லது புனிதமான ஒன்றினைக் கடவுளர் விரும்புகின்றனரா?" என்ற வினாவை எழுப்பினார். இது ஒரு அருமையான கேள்வி. இதன் பிறகு யுதைபுரோ தம் முடிவை மாற்றிக்கொண்டார்.

கடவுளர்கள் எவற்றைப் புனிதமானவை என விரும்புகின்றனர் என்பதை அறியவேண்டும். அல்லது நாம் புனிதமானவை என நம்புகின்றவற்றைக் கடவுளர்களும் ஏற்கின்றனரா எனத் தெரிய வேண்டும். இச்சிக்கலிலிருந்து நம்மை விடுப்பது உண்மை காணும் திறனறிவு.

சாக்ரட்டீஸ் இறந்த பொழுது இருவர் உடன் இருந்தனர். ஒருவர் ஆதென்சைச் சார்ந்த 'ஆன்டிஸ்தினஸ், மற்றொருவர், 'மெகரா' என்ற பகுதியைச் சேர்ந்த 'எலுசிடஸ்' என்பவராவர். இவர் சாக்ரட்டீஸ் மீது மிகவும் பற்றுடையவர். மெகராவைச் சார்ந்த குடிமக்கள் யாரும் ஆதென்ஸ் நகருக்குள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த பொழுது 'எலுசிடஸ்' தம்மை ஒரு பெண்போல ஒப்பனை செய்து கொண்டு இருண்ட பிறகு தமது குருவைச் சந்திக்க வந்து விடுவாராம். ஆன்டிஸ்தினஸ் தமது ஆசானின் மீது கொண்டிருந்த அன்பும் குறைந்ததல்ல. இவ்விருவரும் சாக்ரட்டீஸின் மறைவிற்குப் பிறகு அவர் கொள்கைகளைப் பரப்பப் பள்ளிகளைத் தொடங்கினர். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்பும் அப்பள்ளிகளின் சுவடுகளை நம்மால் அறிய முடிவது வியப்பைத் தருகின்றது.

சாக்ரட்டீஸின் உரை தருக்கத்தோடு இணைந்த போதனைகளாகும். அவை ஒரு லட்சிய வாழ்க்கையை மட்டும் ஊக்குவிப்பவை அல்ல. அவை வெற்று உபதேசங்களாக அல்லாமல் தத்துவ விவாதங்களுக்கு வழிவகுத்தன. அவர்கூறிய ஒவ்வொன்றும் விவாதங்களிலிருந்து பெறப்பெற்றவையே. அவைகளுக்குரிய காரணங்கள் கட்டாயமாக்கப் பெற்றன. முடிவுகள்

ஆராயப்பெற்றன விளக்கங்கள் மெருகூட்டப்பெற்றன. அவற்றின் மூலம் பெற்ற விளைவுகள் காரணங்களோடு முடிவு செய்யப்பெற்று வெற்றுக்கருதுகோள்கள் மறுக்கப்பெற்றன. இவ்வித அணுகுமுறையே ஒருவர் எங்ஙனம் வாழவேண்டும் என்பதை நியாயப்படுத்துகின்றது.

தூயநெறிமுறை பிடிப்பில்லாதவர்கள் சாக்ரட்டீஸை எளிதாகப் பின்பற்றிவிட முடியாது. இருப்பினும் அவருடைய இறப்பிற்குப் பின்பு அவருடைய பல நண்பர்கள் அவருடைய கொள்கைகளைக் கொண்டுசெல்ல முயன்றது வியப்பளிக்கின்றது. அவர்களில் பலர் பல்வேறு வகைகளில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர். அத்தகையவர்களில் தலையாய வாரிசாக பிளேட்டோ விளங்கினார். சாக்ரட்டீஸின் கொள்கைகளை முன்னெடுத்துச் சென்றவர்களில் மேற்கூறிய ஆன்டிஸ்தினஸ், எலுசிடஸ் மற்றும் விபியாவைச் சார்ந்த அரிஸ்டிபஸ் ஆகிய மூவரும் குறிப்பிடத்தக்கவராவர். எனினும் பிளேட்டோவே தன் ஆசானை உலகுக்கு உயர்த்திக்காட்டியவராவார்.

அரிஸ்டிபஸ் மற்றும் ஆன்டிஸ்தினஸ் என்ற இருவரும் 'உண்மையான மகிழ்ச்சியைத் தேடித் தொடர வேண்டுமாயின் அதற்குச் சாக்ரட்டீஸினுடையது போன்ற அறிவுத் திண்மை வேண்டும் என்ற கருத்தினை உடையவர்களாக இருந்தன. 'உண்மையான மகிழ்ச்சியைத் தேடி அடைய ஒருவர் தமது விருப்பங்களை நிறைவு செய்ய முயற்சிப்பதைவிட அவற்றை விட்டொழிப்பதே சிறந்த வழியாகும்' என ஆன்டிஸ்தினஸ் கருதினார். 'ஒரு நல்ல மனிதனை எந்தத் தீமையும் அணுகமுடியாது' எனச் சாக்ரட்டீஸ் கூறியதை ஏற்றுக்கொண்ட ஆன்டிஸ்தினஸ், அவர் அதற்கேற்பச் செல்வம் சுகபோகம் முதலானவற்றை விரும்பாமல் தன்னலமறுப்பாகிய தத்துவத்தை மேற்கொண்டு வறுமையை ஏற்றுக்கொண்டதைப் பசுமரத்தாணிபோல் மனதிற் பற்றிக் கொண்டார். அதனால் 'ஒரு மனிதன் நல்லவனாக வாழ்வதைவிட வேறு எதுவும் முக்கியமானதல்ல' என்ற உறுதியான முடிவை ஆன்டிஸ்தினஸ் மேற்கொண்டார்.

சாக்ரட்டீஸ் ஏதென்சு நகரக்குடியரசின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு உண்மையாக நடந்து கொண்டார். அந்நகரை அவர் மிகவும் நேசித்தார். அவரது மரணதண்டனைக்குப்பிறகு அவரை ஏதென்சு நகரை விட்டுத் தப்பிச்செல்ல வேண்டிச் சிலர் முயற்சி மேற்கொண்டனர். ஆனால் சாக்ரட்டீஸ் மறுத்துவிட்டார். ஏதென்சு நகரையே வாழ்விடமாகக் கொண்ட அவர், அந்நகரம் தொடுத்த போர்களில் ஒரு போர் வீரனாக நகரின் புறம் போந்தாரே தவிர வேறு என்றும் அந்நகரை விட்டு நீங்கி இருக்கவில்லை. எந்த ஏதென்சு நகரில் சட்டங்களுக்குட்பட்டுத் தமது வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழித்தாரோ அந்நகரின் சட்டம் தமக்கு ஒரு தவறான தீர்ப்பளித்தாலும் அதனையும் சாக்ரட்டீஸ் ஏற்றுக்கொண்டார். பிளேட்டோவின் ஆரம்பகால உரையாடல்களின் குறிப்புகளிலிருந்து இதனை நாம் அறிகின்றோம். தமது மரணத்தைக் கூடத் துச்சமாக மதித்துத் தம் நகரிலேயே வாழ்ந்து மடிந்த அம்மேதையின் நிலைப்பாடு இன்றும் உலகம் வியந்து நிற்கும் செயலாகவே விளங்குகின்றது.

சாக்ரடீஸின் சிந்தனைகளுக்குச் சான்றளிப்பவர்களாக, பிளேட்டோ, செனோபன், அரிஸ்டோபனிஸ், அரிஸ்டாட்டில் ஆகிய நால்வர் விளங்குகின்றனர். ஆனால் இவர்களில் யாரும் வரலாற்றாசிரியர் விரும்புமாறு செய்திகளைக்

கொடுக்கவில்லை என்றே கூறலாம். இந்நால்வரில் முதன்மையானவரும், சாக்ரட்டீஸ் வழக்கு மன்றத்தில் நிற்கும்போது நேர் சாட்சியாக இருந்தவரும், அவரை மிகவும் நேசித்த மாணவருமான பிளேட்டோ தமது ஆசானின் வழக்கையையும், அவரின் வாத மறுப்பினையும் அவர் மறைந்த சில ஆண்டு கழித்தே எழுதியுள்ளார். மேலும் அவர் தமது ஆசான் மேற்கொண்ட பற்றுதலால் தமது நூல்களில் இடம்பெறும் உரையாடல்களில் அவர் பெயர் இடம்பெறுமாறு செய்துள்ளார் எனக் கூறலாம்.

மற்ற மூவரில் செனோபன் பிளேட்டோ போலத் தத்துவவாதியாக நின்று சாக்ரட்டீஸின் மேதைமையை விளக்கும் தகுதி உடையவராக இருந்தார் எனக்கூற முடியாது. போர்த்தளபதியாக இருந்த அவர் முடிந்தவரை சாக்ரட்டீஸைக் கௌரவமானவராகக் காட்ட முயன்றிருக்கின்றார் எனலாம். இதற்கு மாறாக நாடக ஆசிரியரான அரிஸ்டோபனிஸ் சாக்ரட்டீஸின் தகுதியை உணராதவராக அவரைத் தம் நாடகங்களில் இழிவுபடச் சித்திரித்துள்ளார். அடுத்தவரான அரிஸ்டாட்டில் சாக்ரட்டீஸ் மறைந்தபின் பதினைந்து ஆண்டுகள் கழித்துப் பிறந்தவராகலின், அவரைப் பற்றி மதிப்பிடும் தகுதியைப் பிளேட்டோ முதலானோர் எழுதிய எழுத்துக்களைப் படித்த பின்பே பெற்றார். இங்ஙனம் நால்வரும் வெவ்வேறு நிலைகளிலிருந்து சாக்ரட்டீஸைக் காட்டியிருப்பது அவரைப் பற்றிய ஆய்வுக்கு வித்தாக அமைகின்றது.

சாக்ரட்டீஸின் மதிப்பீட்டில் உண்மையான மகிழ்ச்சி என்பது ஆன்ம நிறைவாகக் கருதப்பெற்றது. அத்தகைய வாழ்வே மிகச்சிறந்த மனித வாழ்வாகவும் அவர் கொள்ளுகின்றார். இந்த வகையில் பார்த்தால் மகிழ்வைத் தேடுகின்ற பயணம் அவ்வளவு எளிதானதல்ல என்பதை உணரலாம். சாக்ரட்டீஸைப் பின்பற்றிய அனைத்துத் தத்துவக் கொள்கைகளும் உயரறிவானது ஒழுக்கத்தையும், ஒழுக்கம் பெருமகிழ்வையும் விளைவிக்கின்றன என்ற அவரின் கோட்பாட்டைப் பகிர்ந்து கொள்ளுகின்றன. ஆனால் அரிஸ்டிபஸ் முதலான சிலர் சாக்ரட்டீஸ் கூறிய உயராக்கத்தை விடுத்துப் பொருளுலக இன்பங்களையே மகிழ்ச்சி தரக்கூடியவை எனவும், அவையே சாத்தியமானவை எனவும் கொள்கின்றனர். பின்பற்றக் கடினமானவற்றிற்கு எதிர் நிலை தோன்றுவது இயல்பானதே!

சாக்ரட்டீஸ் அரசியல்வாதி அல்லர். பெருங் கூட்டத்தைச் சேர்ப்பதுவும் அவர் நோக்கமல்ல. தமது வாழ்வுப் பயணத்தில் உண்மையைத் தேடும் பணியில் அவர் ஒருவருடனோ, அல்லது சிறுகுழுவிடமோ விவாதம் செய்வதையே மேற்கொண்டிருந்தார். நமது நாட்டிலும் பண்டைக் காலத்தில் உயர்நிலை பெற்றிருந்த குருமார்கள் தாம் எதனைப் பெற்றிருந்தனரோ அதனை ஒரு சில சீடர்களுக்கே வழங்கியதைக் காண்கின்றோம். மனிதரின் பக்குவ நிலைகளுக்கேற்பவே போதனைகள் அமைந்தன. பல்வேறு தத்துவக் கோட்பாடுகளும் சமயங்களும் தோன்றுவதற்கு இதுவே காரணமாகின்றது. எங்ஙனமாயினும் மேற்கு நாடுகளின் தத்துவ வரலாற்றில் முதலில் குறிப்பிடப்பெறுகின்ற நிலையினைச் சாக்ரட்டீஸ் பெற்றார். சாக்ரட்டீஸ் எனும் சிறு ஊற்றாகப் புறப்பட்ட நதி பிளேட்டோ அரிஸ்டாட்டில் எனும் பெரும் நதிகளாக உருவெடுத்திருப்பதைத் தத்துவ இயல் வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

# தொல்காப்பியத்தில் படிமலர்ச்சிக் கோட்பாடு

**க.முத்துச்சாமி**
**தமிழ்த்துறைத்தலைவர் (பணிநிறைவு)**
**மாமன்னர் கல்லூரி,**
**புதுக்கோட்டை.**

**முன்னுரை**

தொன்று தொட்டுத் தோன்றி இன்றுவரை உலகில் மீந்துள்ள உலக மெய்யியல் சிந்தனைப் பள்ளிகளைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்து வகைப் படுத்தினால், அவை **1.பொருள் முதல் கோட்பாடு, 2.கருத்து முதல் கோட்பாடு** என இருவகைக்குள் அடங்கும். இந்திய மெய்யியல் சிந்தனைப் பள்ளிகளையும் அவ்வாறே அடக்கலாம். சைமினியின் பூர்வ மீமாம்ச சூத்திரம், பத்ராயணரின் பிரம்ம சூத்திரம் ஆகிய இரண்டைத் தவிர்த்த **கௌதமரின் தருக்கம், கணாதரின் சிறப்பியம், கபிலரின் எண்ணியம், பதஞ்சலியின் ஓகம்** ஆகிய நான்கு மெய்யியல் பள்ளிகளும் தமிழர் மெய்யியல் பள்ளிகள்.[1] இந்நான்கு மெய்யியல் பள்ளிகளின் நூல்கள் பொருள்முதல் கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டவை. அவை முற்றான இயல்பான அவற்றின் வடிவத்தில் இன்று நமக்குக் கிட்டவில்லை. எதிரிகளின் வெறுப்பு வாக்குமூலங்களைக் கொண்டே அவை அறியப்படுகின்றன.

கருத்து முதல் கோட்பாட்டாளர்களின் நூல்கள் காலம் கடந்தும், வடிவம் மாறாமல் வண்ணம் குலையாமல் 'முன் இருந்தபடி இருக்கும்போது' பொருள் முதல் கோட்பாட்டு நூல்கள் மட்டும் சிதைந்தும், உருமாறியும், அடிப்படை அடையாளத்தை இழந்தும், அழிந்தும் போனது ஏன்? முற்போக்குச் சிந்தனையாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய இடம் இது.

வைதிகத்தை முதன்மைப்படுத்திய கருத்து முதல் கோட்பாட்டாளர்களின் வன்மம், வஞ்சகம், அடக்குமுறை, கருத்துரிமை மறுப்பு, தன்னலம் முதலிய பல்வேறு காரணங்களால் தமிழர் அறிவு மரபு புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. ஆயின் அதே வேளையில் பொருள் முதல் கோட்பாளர்கள் கருத்து முதல் கோட்பாட்டாளர்களின் கருத்துரிமைகளும் எந்தவித இடையூறும் செய்யவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பொருள் முதல் கோட்பாடு என்பது அறிவியல் அடிப்படையில் இந்த உலகத்தின் தோற்றத்தையும் உயிர்களின் படிமலர்ச்சியையும் பொருளின் அடிப்படையில் விளக்குகின்ற ஒரு கோட்பாடாகும். கருத்து முதல் கோட்பாடு என்பது இந்த உலகம், அதிலுள்ள உயிர்கள் முதலியன கடவுளால் படைக்கப் பட்டவை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கோட்பாடாகும். எனவே பொருள் முதல் கோட்பாட்டை நம்பாதது (நாத்திகம்) என்றும், கருத்து முதல் கோட்பாட்டை நம்புவது (ஆத்திகம்) என்றும் சிலர் கூறுவர்.

**உலகத் தோற்றம் – தொன்மங்கள்**

உலகம் தோன்றியது எவ்வாறு? இது குறித்துப் பல்வேறு இனத் தொல்மாந்தரிடையே பல தொன்மங்கள் வழங்கி வந்துள்ளன. சுமேரிய, பாபிலோனியத் தொன்மம், கிரேக்கத் தொன்மம் ஆகியன பெண் உலகைப் படைத்ததாகக் கூறுகின்றன. சைபீரியத் தொன்மம், யூதர்களின் பழைய ஏற்பாடு ஆகியன ஆண் உலகைப் படைத்ததாகக் கருதுகின்றன. இருக்கு வேதம் புருடன் என்பவன் உடலிலிருந்து உலகம் தோன்றியதாகக் கூறுகிறது. மனுதருமம் பிரம்மா உலகைப் படைத்ததாகக் கூறுகிறது. செவ்விந்தியர்களின் குவாரனியர் அண்டப் பிறப்புக் கோட்பாடு சற்று வேறுபட்டு முழுமுதற் கடவுள் தன்னைத் தானே படைத்துக் கொண்டதற்குப் பிறகு உலகைப் படைத்ததாகக் கூறுகிறது.[2]

"மேற்கூறிய தொன்மங்களைப் போன்றில்லாமல் அறிவியல் அடிப்படையில் இவ் அண்டத்தின் தோற்றம் பற்றி விளக்கிய தொன்மையான இனம் ஒன்று உண்டு என்றால் அதுவே தமிழினம் ஆகும்"[3] இதனை முதன்முதல் கண்டறிந்து கூறிய பெருமை பேராசிரியர் முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களுக்கே உரியது. அத்தமிழினத்தின் பெருமையை இன்று உலகுக்கு உணர்த்தும் நூலாக நம்மிடம் உள்ளநூல் வருணாசிரம இடைச் செருகலால் தப்பிப் பிழைத்த தொல்காப்பியமே ஆகும்.

***எண்ணியம் (சாங்கியம்)***

கி.மு.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நம்பப்படும் கபிலரால் இயற்றப்பெற்ற *எண்ணியம் என்ற* சாங்கியம் தொன்மையான ஒரு தமிழ் மெய்யியல் பள்ளி.[4] மகாபாரதத்தில் சாங்கியம் காலம் கடந்தது என்று கூறப்பெற்றுள்ளது. அந்த எண்ணியம் முற்றிலுமாகத் தொலைந்து போயிற்று என்பர். வேத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பொருள் முதல் கோட்பாடு ஆகிய கருத்தோட்டங்களைக் கொண்ட எல்லா நூல்களுக்கும் ஏற்பட்ட கதியே இந்த நூலுக்கும் நேர்ந்தது. எண்ணியக் கோட்பாடுகளை மிகப்பிந்திய கால உரை நூல்களான சாங்கியக் காரிகை, சாங்கியச் சூத்திரம் ஆகியவற்றையே பகுத்துணர வேண்டியுள்ளது. *எண்ணியத்தின்* நூல்கள் விலகிச் சென்றிருந்தாலும் எண்ணியம் பற்றி அறிந்து கொள்ள அந்த உரை நூல்களையே துணையாகக் கொள்ள வேண்டியுள்ளது. சங்கரர் முதன்மையாக எதிரியாகக் கருதி எண்ணியக் கோட்பாட்டைப் 'பிரதான மல்லன்' என்று குறிப்பிடுகிறார். அறுபதற்கும் மேற்பட்ட நூற்பாக்களில் எண்ணியத்தை எதிர்த்தே அவரால் மறுத்துக் கூறப்பெற்றுள்ளன. அதிலிருந்தே எண்ணியக் கோட்பாடுகளை நாம் உய்த்துணர வேண்டியுள்ளது. இவ்வாறே மணிமேகலையிலும் எண்ணியக் கோட்பாடு *கூறப்பெற்றுள்ளது.* எனவே எண்ணியக் கோட்பாடு அதன் எதிரிகளிடமிருந்தே அறியப் பெறுகின்றது.

*எண்ணியம் என்ற* மெய்யியல் பள்ளி குறித்துப் பழைமையான இந்துக்களின் உடன்பாட்டு அறிவியல்கள் என்ற நூலில் அறிஞர் பி.என்.சீல் இவ்வாறு குறிப்பிடுவதாகத் தேவி பிரசாத் சட்டோபாத்யாயா குறிப்பிடுகிறார். "உலகப் படைப்பின் பரிணாம வளர்ச்சி பற்றிய தொன்மை மிக்க தெளிவான, முழுமையான சிந்தனையை உள்ளடக்கியதாகச் சாங்கியம் விளங்குகிறது."[5]

எனவே படிமலர்ச்சிக் கோட்பாடு குறித்த மெய்யியல் பதிவில் எண்ணியமே பழைமையானது. அம்மரபு வழியே தொல்காப்பியத்திலும் படிமலர்ச்சிக் கோட்பாடு இடம்பெற்றுள்ளது.

**உலகத்தோற்றம்: தொல்காப்பியம்**

உலகம் எவ்வாறு தோன்றியது? இக்கேள்விக்கு விடையாகத் தொல்காப்பியர்,

*நிலம்தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம் ஆதலின்*
*இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்*
*திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும் (1589)*

எனக் கூறுகிறார். இந்நூற்பா அறிவியல் நோக்கில் உலகத்தோற்றம், உயிரற்ற பொருள்களின் தோற்றம், உயிரிகளின் தோற்றம் ஆகியன பற்றிக் குறிப்பிடுகிறது.

*இதற்கு உரைவரைந்த முனைவர் தமிழண்ணல்,*

1. "இவ்வுலகம் என்பது நிலம், தீ, நீர், வளி(காற்று), விசும்பு (ஆகாயம்) ஆகிய ஐம்பெரும் பூதமும் கலந்த கலப்பால் ஆகியது.
2. இவ்வுலகமும் உலகப் பொருள்களும் இவ்ஐந்து பூதங்களால் உருவானவை.
3. அழியும் போதும் இவ் ஐந்தாகவே மாறும்.
4. மீட்டுருவாக்கம் பெற்று இவை சேர்ந்தும் பிரிந்தும் பலவகைப் பொருள்கள் ஆகின்றன.
5. மனித உடலுட்படத் தோன்றியும் மறைந்தும் உலகம் நடக்கிறது.
6. இதிலுள்ள உயர்திணை, அஃறிணை எனும் இருதிணையும் ஆண், பெண், பலர், ஒன்று, பல எனும் ஐம்பாலுமான பெயர்கள் அனைத்தும் அவ்வவற்றின் மரபு வழக்கு மாறாமல் (வழுவாமல்) திரிவுபடாத நல்ல வடிவமைந்த சொற்களைக் கொண்டு வழங்கவேண்டும்"[6] எனக் கூறியுள்ளார்.

இலக்கண ஆசிரியர் என்ற முறையில் சொற்களைப் பற்றிய மரபுகளைக் கூறும் இடத்தில் தொல்காப்பியம் உலகத்தோற்றம் பற்றிக் கூறித் தொன்றுதொட்டு வழங்கிவரும் பொருள் முதல் தோற்றப் பின்புலத்தில் அமைந்த தவிர்க்க முடியாக் கோட்பாடு என்பதும் புலப்படும். இந்நூற்பா உலகத்தோற்றத்தையும் உயிர்களின் படிம மலர்ச்சியையும் விளக்குகிறது என்பதனை இளம்பூரணர் உரையால் அறியலாம். இளம்பூரணர், "கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற்போறல் மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்" உலகமென்றது உலகினுட் பொருளையும், உலகமாவது முத்தும் மணியும் கலந்தாற் போலவும் நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என விரவி நிற்கும். உலகினுட் பொருள் பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றானாற்போல வேற்றுமைப்படாது நிற்கும். அவ்விரண்டையும் உலகம் உடைத்தாகலின் கலந்த மயக்கம் என்றார்" எனக் கூறுகிறார்.

"இப்பொருள் எல்லா உலகத்தையும் விட்டு நீங்காமையின் இவற்றை ஒரு முகத்தான் நோக்க வேறுபாடு இலவாம். ஆதலின் மேற்கூறிப் போந்த முறையினால் வேறுபடுத்து இருதிணையாகவும் ஐம்பாலாகவும் இயன்ற நெறி வழுவாமைத் திரிவுபடாத சொல்லோடே புணர்க்க என்றவாறாம்"[7] என்ற இளம்பூரணர் விளக்கம் இவற்றில் உலகப் பொருட்கள் விரவி நிற்கும் தன்மையையும், ஒன்றாகி நிற்கும் தன்மையையும், ஒவ்வொன்றும் தத்தம் அளவீடுகளில் வேறுபட்டு நிற்கும் நிலைமையையும் நமக்கு உணர்த்துகிறது. எனவே மேற்காட்டிய தொல்காப்பிய நூற்பா கொண்டு உலகத்தின் தோற்றம் குறித்தும், உயிரில்லாப் பொருள்களின் தோற்றம் குறித்தும் உயிரிகளின் தோற்றம் குறித்தும் தொல்காப்பியரின் பொருள் முதல் கோட்பாட்டை அறிந்து கொள்ளலாம்.

**முதற்பொருள்**

"இறையியலாளர்கள் கடவுளை முதற்பொருள் என்றனர். பிளேட்டோ, ஹெகல் போன்றோர் ஒரு பரிபூரணக் கருத்தை முதற்பொருள் என்றனர். பொருள் முதல் வாதிகள் உலகை முதற்பொருள் என்றனர்."[8] தொல்காப்பியரும் உலகத்தை முதற்பொருள் என்று கூறினார். தொல்காப்பியம் முதற்பொருள் என நிலத்தையும் பொழுதையும் குறிப்பிடுகிறது (950) கருப்பொருள்களில் ஒன்றாகத் தெய்வம் முதலாவதாகக் கூறப்படுகிறது (964) நிலத்துடன் தெய்வம் சார்புபடுத்திக் கூறப்பெற்றுள்ளது (951) எனவே பாமயன் சுட்டிக்காட்டியதைப் போல் நிலத்தையும் பொழுதையும் தொல்காப்பியர் முதற்பொருள் என்பதால் கடவுளால் உலகம் தோற்றுவிக்கப்பட்டது என்ற கருத்து தொல்காப்பியத்தில் காணப்படாததோடு அக்கருத்து மறுக்கப்பட்டும் உள்ளது. தெய்வம் என்பது தொன்று தொட்ட இனக்குழு மக்களின் முன்னோர் வழிபாடாகக் கருதப்பட்டுத் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது. இலக்கிய மரபு கருதியே கொடிநிலை, கந்தழி, வள்ளி முதலியன கடவுள் வாழ்த்தோடு வரும் என்று கூறப்பட்டுள்ளது.

**ஐம்பூதக் கோட்பாடு**

ஐம்பூதக் கோட்பாடு தொன்றுதொட்டுத் தமிழர் மரபு சார்ந்தது என்பதனைப் புறநானூறு 2ஆம் பாடல் வழியும், எண்ணியம் என்ற மெய்யியல் வழியும் அறியலாம். 'எண்ணியக் கோட்பாடு அணுவியம், அண்டவியம், திரிவாக்கம், இன்பியம் ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டது.'[9] எண்ணியத்தைப் பரிணாம வாதம் என்பர். "இப்பரிணாமக் கோட்பாட்டை - திரிவாக்கக் கோட்பாட்டை விளக்கும் நூல் இந்திய மொழிகளில் தமிழ்நூலான தொல்காப்பியம் மட்டுமே"[10] எனவே தொன்றுதொட்ட தமிழர் மெய்யியலை அடிப்படையாகக் கொண்டே தொல்காப்பியத்தில் உலகத்தோற்றம் பற்றிய கோட்பாடுகளும், உயிர் உள்ள பொருள் உயிர் இல்லாத பொருள் ஆகியவற்றின் தோற்றக் கோட்பாடுகளும் விளக்கப்பெற்றுள்ளன.

**சித்த மருத்துவம்**

சித்த மருத்துவத்தில் நோய்க் கூறு அறிவதற்கு இன்றுவரை ஐம்பூதக் கோட்பாடு பயன்பட்டு வருகிறது என்பதும், இது தொன்றுதொட்டு இடம்பெறும்

தமிழர்களின் அறிவுமரபு என்பதை நிலைநாட்டும் சான்றாகும். ஒவ்வோர் உறுப்பும் பாதிக்கும்போது அந்தப் பூதத்தைச் சரிசெய்யும் மருந்துகளைத் தேர்ந்தெடுப்பது இன்றும் வழக்கமாக உள்ளது.

| பொறி | பொருள் | பூதம் | புலன் |
|---|---|---|---|
| கண் | உருவம் | தீ | பார்த்தல் |
| காது | ஓசை | விசும்பு(வெளி) | கேட்டல் |
| நாக்கு | சுவை | நீர் | சுவைத்தல் |
| மூக்கு | நாற்றம் | மண் | முகர்தல் |
| மெய் | ஊறு | வளி | உணர்தல்[11] |

சித்த மருத்துவப் பாடல் ஒன்று,

*பாரப்பா பூதம்ஐந்து மண்நீர் தேயு*
*பரிவான ஆகாயம் ஐந்தி னாலே*
*சேரப்பா சமமாச்சு மண்ணின் கூறு*
*செறிமயிர்தோல் என்புஇறைச்சி நரம்பு அனைத்தும்*
*நேரப்ப அப்புவின்கூ றுஉதிரம் மச்சை*
*நீர் மூளை சுக்கிலமொடு ஐந்தாகும்*
*காரப்பா தேயுகூறு பயம்ஆங் காரம்*
*கடுஞ் சோம்பல் நித்திரமை துனம் களஞ்சே*
*அஞ்சான வாயுவின் கூறுஇருத்தல் ஓடல்*
*அவை நடத்தல் கிடத்தலுடன்*
*அஞ்சாத ஆகாயக் கூறு காமம்*
*அதிகுரோத லோபமத மோகம் அஞ்சாம்*

என ஐம்பூதங்களின் விளைவுகளை விளக்குகிறது. ஐம்பூதத்தால் எவ்வாறு உடல் உருவாக்கம் பெற்றது என்பதை அப்பாடல் விளக்குவதுபோல் தோன்றுகிறது.

மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பூதங்களால் ஆனது உடல்.

உடல் உறுப்புக்களும் உடல் இயல்புகளும் எவ்வாறு ஐம்பூதங்களால் உருவாக்கம் பெற்றது என்பதையும் அப்பாடல் விளக்குகிறது.

| பூதம் | உடல் உறுப்புக்களும் உடல் இயல்புகளும் |
|---|---|
| மண் | மயிர், தோல், எலும்பு, சதை, நரம்பு |
| நீர் | குருதி, மச்சை, சிறுநீர், மூளை, விந்து |
| தீ | பயம், ஆங்காரம் (இறுமாப்பு), சோம்பல், தூக்கம், மைதுனம் |
| காற்று | இருத்தல், ஓடல், நடத்தல், கிடத்தல் |
| ஆகாயம் | ஆசை, உட்பகை, மோகம், மதம், வஞ்சனை[12] |

ஐம்பூதங்களின் பிறப்பு, அளவு, அவை அமைந்துள்ள பொருள்கள் ஆகியன குறித்துச் சித்தர் மரபு விரிவாகவே விரித்துரைக்கிறது.[13]

**ஐந்திரம்**

தொல்தமிழ் மரபான ஐந்திரம் என்ற மெய்யியல்பள்ளி அணுவியம், அண்டவியம், தருக்கம், எண்ணியம், உலகாய்தம் ஆகிய ஐந்து கோட்பாடுகளின் ஒட்டுமொத்தப் பெயராக இருந்திருக்க வேண்டும். தமிழ் மரபைச் சார்ந்த அந்த மெய்யியல் பள்ளியைச் சேர்ந்தவராகத் தொல்காப்பியர் இருந்ததால்தான் ஐந்திர மரபை உட்கொண்டு உயிர்களின் படிமலர்ச்சிக் கோட்பாடு உள்ளிட்ட பொருள்முதல் கோட்பாடுகளைத் தம் நூலில் விளக்கியுள்ளார். இக்காரணத்தை முன்னிட்டே அவர் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர்' எனப் பாராட்டப்பெற்றார் எனலாம்.

**தொல்காப்பியத்தில் படிமலர்ச்சிக் கோட்பாடு**

தொல்காப்பியம் முழுவதும் தேடிக் கண்டுபிடிக்கத்தக்க அளவில் பொருள் முதல் கோட்பாடுகள் இருப்பினும், சிறப்புநிலையில் அமைந்த படிமலர்ச்சிக் கோட்பாடு குறித்து ஆராய்வதற்குப் பல இயல்கள் துணைபுரிகின்றன. எழுத்ததிகாரத்தில் புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல் குற்றியலுகரப் புணரியல் ஆகியவற்றில் உயிருள்ள பொருள்கள், உயிரற்ற பொருள்கள், மனிதர்கள் பற்றிக் கூறப் பெற்றுள்ளன. சொல்லதிகாரத்திலும் படிமலர்ச்சியுற்ற பொருள்களின் பட்டியல்கள் இடம்பெற்றுள்ளன. விரவுப் பெயர்கள் இறைச்சிக் கோட்பாடு ஆகியன படிமலர்ச்சிக் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. உரியியலில் சில விலங்குப் பெயர்கள் அவற்றின் பொதுப் பெயர்கள் ஆகியன படிமலர்ச்சிக் கோட்பாட்டின் நிலையை நமக்கு அறிவிக்கின்றன. மரபியல் விலங்கு பறவைப் பெயர்களை விளக்குவதால் அந்த இயல் கொண்டு படிமலர்ச்சிக் கோட்பாட்டை விரிவாக ஆராய இயலும்.

**படிமலர்ச்சிக் கோட்பாடு**

**லாமார்க்**

பிரெஞ்சு நாட்டவரான லாமார்க் என்ற பயிரியல் அறிஞர் 1802ஆம் ஆண்டு தற்போதுள்ள உயிரிகள் தொல்பழங்காலத்தில் தோன்றிய வளர்ச்சியடையாத உயிர்ப்பொருள்களிலிருந்தே தோன்றின என டார்வினுக்கு முன்னரே படிமலர்ச்சிக் கோட்பாட்டைத் தக்க சான்றுகளுடன் நூலாக வெளியிட்டார்.

**வாலெஸ்**

டார்வின் காலத்திலேயே வாலெஸ் என்ற அறிவியல் அறிஞரும் டார்வின் போலவே மலேயாவில் இருந்து ஆராய்ந்து படிமலர்ச்சிக் கோட்பாட்டைக் கண்டறிந்தார்.

**டார்வினில் படிமலர்ச்சிக் கோட்பாடு**

கி.பி.1831 டிசம்பர் 27ஆம் நாள் 'பீகல்' என்ற கப்பலில் தென் அமெரிக்கா, பசிபிக் கடல், இந்துமாக்கடல், ஆப்பிரிக்கா ஆகியவற்றை 5 ஆண்டுகளாகச் சுற்றி சார்லஸ் டார்வின் பயணம் செய்தார். அப்போது பல்வேறு வகை உயிரிகளின் எலும்புக் கூடுகள், தாவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார். 1836இல் வீடு திரும்பிய டார்வின் அப்பொருள்கள் குறித்து ஆராய்ந்தார். பல்வேறான மாறுபட்ட சூழ்நிலையில் வாழும் வெவ்வேறான உயிரினங்களில்

சில அற்புதமான பொதுமைப் பண்புகளைக் கொண்டிருப்பது அவருக்குப் புலப்பட்டது. சில தனிப்பட்ட வேற்றுமைகள் அவற்றிற்கிடையே இருப்பதையும் அவர் கண்டறிந்தார். இந்த உயிரினங்கள் எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருக்கலாம். பலவகைகளாக அவை வளர்ச்சியடைந்ததற்குப் பிறகு, அவை வேறுபட்டுப் போயிருக்கலாம். ஆனாலும் அவை அனைத்தும் ஒரே உயிர் மரத்தின் கிளைகள் மட்டுமே என்பதை அவர் புரிந்து கொண்டார். தொடர்ந்த ஆய்வு படிமலர்ச்சிக் கோட்பாடாக மலர்ந்தது.

**அடிப்படை**

1859இல் தம் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு உயிரிகளின் தோற்றம் என்ற புரட்சிகரமான நூலை டார்வின் வெளியிட்டார். அந்நூலில் தம் கோட்பாட்டின் அடிப்படையாக டார்வின் "உயிரிகளுக்கிடையே ஒவ்வொன்றற்குமுரிய ஒற்றுமை, அவற்றிற்கிடையே அமைந்த கருநிலை உறவுகள், அவற்றின் நிலவியல் பகிர்வு, மண்ணணியலின் காலமுதிர்ச்சி இவைபோன்ற பிற உண்மைகள் ஒவ்வோர் உயிரியும் தனித்தனியாகப் படைக்கப்படவில்லை என்பதையும் அவை வழிவழியாகப் பிற உயிரிகளிலிருந்து பலவகையாக மாற்றம் பெற்று வந்துள்ளன என்பதையும் முடிபுகளாகக் கொள்ள ஓர் இயற்கை அறிவியலாளனை இட்டுச் செல்லும்"[14] எனத் தம் அறிமுக உரையில் கூறினார்.

**உயிர்த்தோற்றம்**

சூரியனிலிருந்து வெடித்துச் சிதறிய நெருப்புப் பிழம்பாக அமைந்து குளிர்ந்து நீர்மநிலையை அடைந்து இறுதியாகப் பூமியின் மேல் அடுக்கு கெட்டிப்பட்டுப் பூமியின் மேல் தட்டாக ஆனது என்று அறிவியல் கூறுகிறது. பூமியின் தட்டையான பகுதியில் உயிர்தோன்றியது. மாமேதை ஏங்கல்ஸ் உயிர் என்றால் என்ன என்பதற்கு அறிவியல் அடிப்படையில் விளக்கமளித்தார். "உயிர் என்பது புரதப்பொருள் இருப்பின் ஒரு தனிவடிவம் மட்டுமே. பிளவு, மறுகட்டமைப்பு, இயக்கத்தின் வெளிச்சூழலிலிருந்து உட்கொள்ளுதல், வெளியேற்றுதல் ஆகிய செயல்களைச்செய்து கொண்டிருத்தல் அதன் முதன்மையான இயல்பாகும். அந்த இயக்கம் நின்றுவிட்டால் உயிர்முடிந்து புரதம் அழிந்துவிடும்"[15] என்று விளக்கினார். அவர் கூறிய கருத்தை அவர் காலத்துக்குப்பின் கண்டுபிடித்த அறிவியல் அடிப்படையில், "உயிர் என்பது நியூக்ளிக் அமிலம், புரதப் பொருட்கள் ஆகியவற்றின் ஒரு தனிவடிவம்"[16] எனலாம்.

**உயிர்வளர்ச்சி ஐந்து கட்டங்கள்**

உயிர் உருவாக்கத்தில் ஐந்து கட்டங்கள் இருந்து வந்துள்ளன.

1. கார்பன், ஹைட்ரஜன் சேர்மம் (ஹைட்ரோகார்பன்)
2. ஹைட்ரோகார்பன், நைட்ரஜன் ஆக்ஸிஜன், நீர் ஆகியவற்றின் சேர்மங்கள்
3. நியூக்ளிக் அமிலம், புரதங்களின் சேர்மம்.
4. இவை வளர்ச்சி அடைந்து குணங்களைப் பெற்றது.

5. உயிர்ப்பொருள் மலர்ந்து ஒருசெல் உயிர் உண்டானது.

தொடக்கநிலை உயிர்களான ஒருசெல் அமீபாக்கள் நீரிலுள்ள கார்பன் முதலான சேர்மப் பொருட்களை உண்டு வாழ்ந்தன. சேர்மப் பொருட்களால் உருவான நுண்ணியிரிகளால் கார்பன், கார்பன்டை ஆக்ஸைடாக மாறியது. காலப்போக்கில் சில உயிரிகள் காற்றிலிருந்து கார்பன்டைஆக்ஸைடை உட்கொண்டு ஆக்ஸிஜனை வெளியிடும் ஆற்றல் பெற்றன. இந்த ஆற்றல் உயிர் மலர்ச்சிப் படிக்கட்டில் முதல்படியாகும். தம்மைச் சுற்றியுள்ள செல்களை உட்கொண்ட உயிர்கள் உயிரினங்களாக உருவாயின. தாவரங்கள் கார்பன்டை ஆக்ஸைடை உட்கொண்டு ஆக்ஸிஜனை வெளியிட்டன. உயிரிகள் தாவரங்கள் வெளியிடும் ஆக்ஸிஜனை உட்கொண்டு கார்பன் டை ஆக்ஸைடை வெளியிட்டன.[17] இவ்வாறு உயிரியல் வளர்ச்சிப் படிமலர்ச்சியாக வளர்ந்தது.

**மூன்று கூறுகள்**

டார்வின் படிமலர்ச்சிக் கோட்பாடு மூன்று அடிப்படையான கூறுகளைக் கொண்டது.

1. மாறுபாடு எல்லா உயிரிகளிடமும் காணப்பெறுவது. அவற்றில் ஏற்றத்தாழ்வாக வேற்றுமை இருக்கும்; நிறங்கள் கூட மாறுபடும். சில வலுவின்றியும் சில வலிமையாகவும் இருக்கும். அவற்றின் இயக்கம், வேகம் ஏற்றத் தாழ்வுடையதாக இருக்கும்.

2. மரபுவழி ஒத்த உயிரி தன் வடிவத்தை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் ஆற்றல் அனைத்து உயிரினங்களும் சுழல்வட்ட வளர்ச்சியில் தம் இனத்தைப்பெருக்கிக் கொண்டே போகும். அவற்றின் வளர்ச்சி 1+1 ஆக இல்லாமல் 1+60 லட்சம் என்றோ 1+70 என்றோ பெருகும். இவ்வளவு பெரிய அளவில் வளர்ச்சி ஏற்பட்டாலும், உயிரினங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய நிலையாகவே இருக்கிறது. அதன் வளர்ச்சி குறிப்பிடத்தகுந்த அளவிற்கு மேல் இருப்பதில்லை. அளவுக்கு மீறிப் பிறப்பு விகிதம் இருந்தும் அந்த அளவுக்கு உயிரிகள் எண்ணிக்கையில் பெருகாமல் குறிப்பிட்ட அளவில் நிலைத்திருப்பதற்குக் காரணம் என்ன? இதனை ஆராய்ந்த டார்வின் அதற்கான காரணத்தைக் கண்டறிந்தார். ஆகவே தக்கது வாழும் தகாதது வீழும்.

3. உயிர்வாழ்வதற்கான போராட்டம் எந்தெந்த மாறுதல்கள் ஒரு குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்புடையதாக இருக்குமென்று கணித்து அதற்கேற்ப இனப்பெருக்க முறைகளைத் தீர்மானித்து உயிரினங்கள் மாறுதல்களை ஏற்படுத்திக் கொள்வது. ஒவ்வொரு உயிரியும் உயிர் வாழ்வதற்கு உணவு ஈட்ட வேண்டியுள்ளது. எதிரிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள வேண்டியுள்ளது. குட்டிகளைப் பேண வேண்டியுள்ளது. தட்பவெட்ப நிலைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இவை அனைத்துக்காக ஒவ்வொரு உயிரியும் விபரீத சூழ்நிலைகளுடன் மோத வேண்டியுள்ளது. இந்த மோதலில் அதிகம் தகுதி வாய்ந்தவை நீண்ட காலம் வாழும். தகுதி குறைந்தவை குறைந்துகொண்டே வரும்.[18]

படிமலர்ச்சிக் கோட்பாட்டைப் புரியவைக்க டார்வின் மொழியின் தோற்றத்தையும் அதன்பின் விளைவுகளையும் ஒப்பிட்டு விளக்கியுள்ளது

மொழித் தோற்றம் குறித்து அறிய விரும்பும் ஆர்வலர்களுக்குப் பெரிதும் பயன்படும். டார்வின் கூறுகிறார், "மொழிகளைக் கொண்டு உயிரினங்களின் பகுப்புப் பற்றிய நோக்கை எடுத்துக்காட்டி விளக்குவது மிகவும் பயனுடையதாக இருக்கும். மனிதகுலத்தின் கொடிவழி பற்றிய ஒரு செம்மையான பதிவை நாம் பெற்றிருந்தால் மனித இனங்களின் குடிவழி ஒழுங்கு உலகம் முழுவதும் இப்போது பேசப்படும் பல்வேறு மொழிகளின் சிறந்த பகுப்பை நமக்கு வழங்கி இருந்திருக்கக்கூடும். அழிந்துபோன மொழிகளையும் இடைப்பட்ட மெல்ல மாறிக்கொண்டுள்ள வட்டார வழக்குகளையும் இவற்றுடன் இணைத்துக் கொள்ளலாம். இத்தகைய ஓர் ஒழுங்கு மட்டுமே இயலக்கூடிய ஒன்றாக இருக்கக் கூடும் என்று நான் நினைக்கின்றேன். ஆயின் சில மிகத் தொன்மையான மொழிகள் சிறிது மாறியிருந்திருக்கும்; சிலபுது மொழிகள் உருவாக ஒரு பொது இனத்திலிருந்து தோன்றிப் பரவலினாலும் அதைத் தொடர்ந்து தனிமைப்பட்டதாலும் பல இனங்களின் நாகரிக நிலைகளினாலும் மிக மாறி இருந்திருக்கலாம். தற்கால மொழிகளும் வட்டார மொழிகளும் தோன்றி இவ்வாறு இருந்திருக்கலாம். ஒரேவகை மொழிகளுக்கிடையே உள்ள பல்வேறு வேறுபாடுகளின் அளவீடு குழுக்களாகவும், குழுக்களுக்கு உதவியாகவும் கூறப்பட்டிருக்கலாம். ஆயின் சரியான அல்லது ஒரே மாதிரியானது என்பதே இப்போதும் கொடி வழியில் இயலக்கூடிய ஏற்பாடாக இருந்திருக்கக்கூடும். இதுவே கண்டிப்பாக இயற்கையானதாக இருந்திருக்கக்கூடும். ஏனெனில் அதுவே உறவுகளால் மிக நெருங்கிய அழிந்த மற்றும் தற்கால எல்லா மொழிகளையும் இணைக்கிறது. மேலும் அதுவே ஒவ்வொரு மொழிக்கும் சேய்த்தொடர்பையும் தோற்றத்தையும் தந்திருக்கக் கூடும்."[19]

**தொல்காப்பியத்தில் படிமலர்ச்சிக் கோட்பாடு**

தொல்காப்பியத்தின் உயிர்களின் பாகுபாடு பற்றிய நூற்பாக்கள் (1526-1532) கிடைத்திருந்தால் டார்வின் தம் படிமலர்ச்சிக் கோட்பாட்டை நிலைநாட்ட இவ்வளவு இடர்ப்பட்டிருக்கமாட்டார். உயிரிகளின் தோற்ற வளர்ச்சியையும் பகுப்பாய்வையும் புலன் உணர்ச்சி அடிப்படையில் பாகுபாடு செய்திருப்பார். பின்னர் உட்பகுப்புகளை எளிமையாகவும் வகைப்படுத்தி இருப்பார். ஆய்வு வாய்ப்புக்கள் இல்லாத பழங்காலத்தில் இத்தகைய பகுப்பாய்வை 'நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே' எனத் தொல்காப்பியர் முன்னோர் முறையாகக் குறிப்பிட்டிருப்பதால் எண்ணியம் என்ற மெய்யியல் பள்ளியே இத்தகைய அறிவியல் பாகுபாட்டை ஆராய்ந்து கண்டறிந்து இருக்கும் என எண்ண வேண்டியுள்ளது. உலகில் உள்ள எந்த நூலிலும் காணப்படாத இத்தகைய உயிர்ப்பாகுபாடு அறிவியல் அடிப்படையில் விளக்கப்பட்டிருப்பது தமிழர்கள் நெஞ்சை நிமிர்த்திக்கொள்ளத்தக்க பல அறிவு மரபுகளில் ஒன்றாகும்.

தொல்காப்பியர் உயிர்களின் பாகுபாட்டைப் பொருளதிகாரத்தில் மரபியலில்,

***ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே***
***இரண்டு அறிவதுவே அதனோடு நாவே***
***மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே***
***நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே***

*ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே*
*ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே*
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே* (1526)

எனக் கூறுகிறார். தொல்காப்பியரின் படிமலர்ச்சிக் கோட்பாட்டை எளிதில் புரிந்து கொள்ளப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

உயிர்களின் பாகுபாடு

| வ.எண் | உயிர்வகை | பொறி | புலன் | உயிர்கள் |
|---|---|---|---|---|
| 1. | ஓரறிவுயிர் | உடல் | தொடுதல் | தாவரங்கள் (செடி கொடி,மரங்கள்) |
| 2. | ஈரறிவுயிர் | நா | சுவைத்தல் | நத்தை, சிப்பி |
| 3. | மூவறிவுயிர் | மூக்கு | முகர்தல் | கறையான், எறும்பு |
| 4. | நாலறிவுயிர் | கண் | பார்த்தல் | வண்டு, தும்பி |
| 5. | ஐயறிவுயிர் | செவி | கேட்டல் | விலங்குகள், பறவைகள் |
| 6. | ஆறறிவுயிர் | மனம் | பகுத்தறிதல் | மக்கள் |

தொல்காப்பியர் ஓரறிவுயிரில் தொடங்கி ஆறறிவுயிர் வரை படிநிலையில் விளக்குகிறார். அத்துடன் ஓரறிவுயிர்[20] உற்றறிவது என்று கூறியதற்குப் பிறகு ஈரறிவுயிரை[21] விளக்கும்போது 'அதனொடு நாவே' என்று கூறியிருப்பதால் உற்றறிவது என்ற புலன் உணர்ச்சிக்குப் பிறகு நா என்ற பொறி தோன்றி உயிரிகள் சுவைத்தல் என்ற புலன் உயர்ச்சியைப் பெற்றன என்பதனைத் தம் கருத்தாக விளக்குகிறார். மூவறிவுயிரை[22] விளக்கும்போதும் ஈரறிவுயிரிலிருந்து படிமலர்ச்சி பெற்று மூவறிவுயிர் மூக்கு என்ற பொறியைப் பெற்று முகர்தல் என்ற புலன் உணர்ச்சியைப் பெற்றது என்பதனை 'அவற்றொடு மூக்கே' என்பதால் புலப்படுத்துகின்றார். இவ்வாறு தொடர்ச்சியாக ஒன்றிலிருந்து ஒன்று படிப்படியாக மலர்ச்சி பெற்றது என்பதைத் தொடர்ந்து கூறுகிறார். அவ்வாறே நாலறிவுயிரும்[23] கண் என்ற பொறியைப் படிமலர்ச்சியாகப் பெற்றுப் பார்த்தல் என்ற புலன் உணர்ச்சி பெற்ற நாலறிவுயிராக மலர்ச்சி பெற்றது என்றும் புலப்படுத்துகிறார். நாலறிவுயிரிலிருந்து மலர்ச்சி பெற்றுச் செவி என்ற பொறியைப் பெற்றுக் கேட்டல் என்ற புலன் உணர்ச்சி வளர்ந்து ஐந்தறிவுயிராக[24] மலர்ச்சி பெற்றது என்பதனை 'அவற்றொடு செவியே' எனத் தொடர்ச்சி காட்டுகிறார். ஆறறிவுயிர்[25] என்பது ஐம்பொறிகளுடன் ஐம்புலன்களைப்பெற்று மனம் என்பதைக் கூடுதலாகப் பெற்றுப் பகுத்தறியும் திறம்கொண்ட மக்கள் தொகுதியாக மலர்ந்துள்ளது என முன்னோர் மொழியாகக் கூறியுள்ளார். இத்தகைய படிநிலைத் தொடர்ச்சி ஒன்றிலிருந்து ஒன்று ஆக்கம் பெற்றுப் படிப்படியாக மலர்ந்து மனித இனமாகத் திரிவாக்கம் - கூர்தலறம் - உள்ளது சிறத்தல் - பரிணாமம் - படிமலர்ச்சி என்ற நிலையை அடைந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஓரறிவுயிர் தோன்றியதை விளக்கிய தொல்காப்பியர் அது எதிலிருந்து தோன்றியது என்பதை நேரடியாக விளக்கவில்லை.

சொல்லதிகாரம் கிளவியாக்கம் என்ற இயலில் சொல்வகையை விளக்கும் தொல்காப்பியர் உயர்திணை, அஃறிணை என்ற இருவகைச் சொற்களின் வகையை,

***உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே***
***அஃறிணை என்மனார் அவரல பிறவே***
***ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே (484)***

என்று கூறுகிறார். அதன்வழி மக்கள் அல்லாத பிற எல்லாம் அஃறிணை என்று கூறுகிறார். அஃறிணை எது என்பதற்கு நன்னூலார் எளிமையாக 'உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை' எனக் கூறுகிறார். தொல்காப்பியர் கருத்துப் படியும் உயிர் உள்ள பொருள், உயிர் இல்லாத பொருள் ஆகிய இரண்டும் அஃறிணைப் பொருள்கள். எனவே ஓரறிவுயிராகிய அஃறிணைப் பொருள் உயிர் இல்லாத அஃறிணைப் பொருளிலிருந்தே தோன்றியிருக்க வேண்டும். பொருள் முதல் கோட்பாடும் ஐம்பூதக் கோட்பாடும் இவ்வாறே கூறுகின்றன. உயிரற்ற பொருளின் இயக்கப் படிமலர்ச்சியில் உலகம் தோன்றியதாக அறிவியல் கூறுவதைப் போலத் தொல்காப்பியரும் 'நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' (1589) என்று கூறியுள்ளார். இதுமுன்னரே விளக்கப் பட்டது. எனவே உயிரற்ற பொருள்களிலிருந்தே உயிர்ப்பொருள்கள் தோன்றின என்பதே தொல்காப்பியர் கருத்தாகும்.

தொல்காப்பியர் தொடு உணர்ச்சியை உடையதாக ஓரறிவுயிரைச் சுட்டிக் காட்டுகிறார். அமீபா என்ற செல்லே முதலில் தோன்றிய உயிராக அறிவியலில் சுட்டிக் காட்டப்பெறுகிறது. அது தொடு உணர்ச்சியை உடையதாக இருந்தது என்பதை அறிவியலும் ஏற்றுக் கொள்கிறது. ஓர் அமீபாவை நாம் குண்டுசியால் குத்தினால் அது விலகிச் செல்லும்.[24] எனவே தொல்காப்பியர் ஓரறிவுயிர்க்குத் தொடு உணர்ச்சியை அடிப்படையாகக் கூறியிருப்பது உண்மையே என்பது இதனால் தெளிவாகும்.

எனவே உயிரினங்களைப் பொறிகளால் வகைப்படுத்தியிருக்கும் தொல்காப்பியர் பாகுபாடு அவற்றின் படிமலர்ச்சியை எளிமையாகவும், அறிவியல் முறையிலும், டார்வினுக்கு முன்னரே அறிவித்த ஒரு படிமலர்ச்சிக் கோட்பாடாகும்.

**புல்**

ஓரறிவுயிரின் பட்டியலில் புல்லும் மரமும் இடம்பெற்றுள்ளன. புல் என்பது மூங்கில்போல் உள்ளே துளையுடையவற்றிற்குப் பெயர். புறக்காழனவே புல் என மொழிப, அகக்காழனவே மரம் எனமொழிப (1585) எனத் தொல்காப்பியர் விளக்குகிறார். எனவே ஓரறிவுயிரில் புல்வகையே முந்தியன. மரவகைகளுக்கு இளமைப்பெயர் கூறிய தொல்காப்பயிர் (1523) நெல்லுக்கும் புல்லுக்கும் இளமைப் பெயர் கூறும் வழக்கமில்லை என்று கூறுகிறார். இளமைப் பெயரைச் சொல்லிய மரபுப்படி சொல்லுவதை விட்டுவிட்டு வேறு வகையாகச் சொல்லவே கூடாது என்றும் வரையறுக்கின்றார் (1525). எனவே புல்வகைக்கு இளமைப்பெயர்

இல்லை என்பதாலும் மரம் முதலியவற்றிற்கு இளமைப்பெயர் கூறப்பட்டதாலும் ஓரறிவுயிரின் படிநிலை வளர்ச்சியில் புல்லே முந்தியது என்பது தொல்காப்பியரின் படிமலர்ச்சிக் கோட்பாடாகும்.

**குரங்கு**

படிமலர்ச்சியில் மனிதனுக்கு முந்திய நிலையில் உள்ளது குரங்கு. அக்குரங்கிலிருந்தே மனிதன் தோன்றினான் என்பது டார்வீனியத்தின் விளைவு. அதனால் டார்வீன் முகத்தையும் குரங்கின் உடலையும் இணைத்து டார்வினைச் சிலர் கருத்துப்படத்தின் மூலம் சித்திரித்தனர். ஆனால் டார்வின் மனிதனைப் பற்றித் தம் நூலில் எதுவும் குறிப்பிடவில்லை என்பர். மாந்தனூல் அறிமுகம் என்ற நூலில் மறைத்திரு. ஈ.ஓ.ஜேம்ஸ் சிம்பன்சி கொரில்லா, கிப்பான் ஆகிய குரங்கினத்திலிருந்து மனிதன் தோன்றினான் எனக்கூறியுள்ளது தெரிகிறது.[27]

தொல்காப்பியர் இளமைப் பெயர்கள் குறித்து விரிவாக விளக்கியுள்ளார். மகவு என்ற இளமைப்பெயர் குறித்துத் தொல்காப்பியர் இருநூற்பாக்களில் கூறியுள்ளார். மக்களுக்கு வழங்கும் இளமைப் பெயராக

***குழவியும் மகவும் ஆ இரண்டு அல்லவை***
***கிழவ அல்ல மக்கள் கண்ணே*** *(1522)*

குழவி, மகவு ஆகிய இரண்டு மட்டுமே மக்களுக்கு இளமைப் பெயராக இடம் பெறும் என்று கூறுகிறார். குழவி என்ற சொல் யானை, ஆ, எருமை, கடமான், மரைஆ, குரங்குவகை, மக்கள், மரம், செடி, கொடி ஆகியவற்றிற்கும் உரியன (1518,1519,1520,1521) என்று கூறுகிறார். குழவி என்ற சொல் ஓரறிவு உயிர்முதல் ஆறறிவு உயிர்வரை வழங்குவதால் அச்சொல்லின் வழி உயிரிகளின் படிமலர்ச்சிக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வது ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் அச்சொல் குரங்கிற்கும் மக்களுக்கும் இளமைப் பெயராக இருப்பது கவனிக்கத்தக்கது.

மகவு என்ற சொல் குரங்கின் இளமைப் பெயராக இருப்பதைத் தொல்காப்பியர்

***மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்***
***அவையும் அன்ன அப்பா லான*** *(1513)*

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். மகவு என்ற இளமைப் பெயர் மக்களுக்கும் குரங்கிற்கும் மட்டுமே தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ளது. குரங்கிலிருந்து படிமலர்ச்சி பெற்று உருவானவன் மாந்தன் என்பதைப் புலப்படுத்துகிறது.

திராவிடர் வரலாறு என்ற தம் நூலில் அறிஞர் சோதிப்பிரகாசம், "இந்த மந்தி இனம் அதாவது நிமிர்ந்த குரங்கு இனம், பல் ஆயிரம் ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து மாந்த இனமாக இறுதியில் வளர்ச்சி (வளர்ச்சி) அடைந்த பொழுது, அவர்கள் பேசிய முதல்மொழி தமிழ்மொழிதான் ஆகும்"[28] இதனை "மந்தி என்று முதலில் பெயரிட்ட பின்பே மாந்தன் என்று மனிதன் தனக்குப் பெயரிட்டிருக்கமுடியும்"[29] என ஏற்றுக்கொள்கிறார் ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணியாளர் திருமதி ப.சிவகாமி. எனவே மந்தி என்ற சொல்லிலிருந்து மாந்தன் என்ற சொல் பிறந்ததை ஏற்றுக் கொண்டால் குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற படிமலர்ச்சிக்கு இச்சொற்கள் சிறந்த சான்றாகும்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

# வள்ளுவர் காட்டும் அரமும் மரமும்

**மறைமலை இலக்குவனார்**

*அரம்போலும் கூர்மைய ரேனும்மரம் போல்வர்*
*மக்கட் பண்பில்லா தவர்* *(குறள்.997)*

என்னும் குறள் பண்புடைமை என்னும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. மக்கட் பண்பு இல்லாதவர்கள் அரம் போன்ற கூரிய அறிவு பெற்றிருந்தாலும் மரத்துக்குச் சமமாகவே மதிக்கத்தக்கவர்கள் என்று இதற்குப் பொருள் கூறப்பட்டு வருகிறது. ஒப்புயர்வற்ற உரையாசிரியர் பரிமேலழகரும் இத்தகைய பொருளிலேயே உரை வகுத்துள்ளார்.

ஒப்புரவறிதல் என்னும் அதிகாரத்தில்,

*பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்*
*நயனுடை யான்கண் படின்* *(216)*

என்னும் குறள் மூலம் 'ஒப்புரவு என்னும் சிறந்த ஒழுக்கத்தையுடைய நேர்மையாளனிடம் செல்வம் சேருமாயின் அது பயன் தரும் மரம் உள்ளூரில் பழுத்ததற்குச் சமம் என்று கூறும் வள்ளுவர் மரத்தை இங்ஙனம் தாழ்வாக மதிப்பிடுவாரா என்னும் வினா எழுகிறது.

அரம் போலும் கூர்மையான அறிவு இருந்தாலும் மக்கட் பண்பு இல்லாமல் போய்விடுமாயின் அந்த அறிவினால் பயன் இல்லை.

அந்தக் கூர்மையான அறிவு தீய செயல்களுக்கு வழிவகுத்துவிடலாம் என்பதே இக்குறள் தரும் பொருள். அஃது எவ்வாறெனில் அந்த அரத்திற்குக் கைப்பிடியாக அமையும் மரம் தனது இனமாகிய மரங்களை அறுத்தற்குப் பயன்பட்டு விடுவதைப் போல எனலாம். இக்குறளில் மரம் என்னும் சொல் உயிருடைய மரங்களைப் போல எனலாம். இக்குறளில் மரம் என்னும் சொல் உயிருடைய மரங்களைக் குறிக்கவில்லை. அரத்திற்குக் கைப்பிடியாக அமைந்து தன் இனத்திற்கே கெடுதி செய்யும் மரப்பகுதியையே குறிக்கிறது எனப் பொருள் கொண்டால் இக்குறள் உணர்த்தும் உண்மை தெளிவாகத் தெரியும்.

தன்னால் ஒரு செயலையும் செய்ய இயலாமல் அடுத்தவர் கையில் அகப் பட்டுக்கொண்டு தன் இனத்திற்கே கேடு விளைவிக்கும் இந்த மரத்தை மற்றொரு குறளிலும் எண்ணிப்பார்க்கிறார் வள்ளுவர்.

*உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார்*
*மரம் மக்களாதலே வேறு* *(குறள்.600)*

என்னும் குறளும் ஊக்கம் என்னும் வலிமையில்லாதவர்கள் அடுத்தவர்கள் கையில் மாட்டிக்கொண்டு குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்புகளாகத் தீமை பயப்பர் என எச்சரிக்கிறார்.

இக்குறட்பாக்களில் மரம் என்னும் சொல் வழங்கும் இப்பொருளைத் தெளிந்து கொண்டால் திருவள்ளுரின் உவமைநலன் விளங்குவதுடன் அவர் உணர்த்த வந்த அறிவுரையும் பசுமரத்தாணியாக நம் உள்ளத்தில் பதியும் அல்லவா?

# உரிச்சொல்

முனைவர் **மு.கற்பகம்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை - 9

தொல்காப்பியர் சுட்டும் சொற்களுள் செய்யுட்கு உரியவையாகக் கருத இடங்கொடுப்பன உரிச்சொற்களாம். பெயர் வினை என்பன முழுச் சொற்களாகக் கருதத்தக்கன என்பதும் இடையும் உரியும் அவற்றிலிருந்து சற்று மாறுபட்ட தன்மையுடையன என்பதும் நின்று நிலவுகின்றது.

ஏனெனில் தொல்காப்பியர்,

*"சொல்லெனப் படுப பெயரே வினையென்று*

*ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" (தொல். சொல். 155)* என்றவர்,

*"இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்*

*அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப" (தொல். சொல். 156)*

என்கிறார். ஆனால் எழுத்ததிகார முக்கிய கூறுபாடுகளுள் ஒன்றான புணர்ச்சியில் இடைச்சொற்கள் கையாளப்படுகின்றன. உரிச்சொற்களோ "புணரியல் நிலையிடை உணரத் தோன்றாதவற்றுள்" ஒன்றாகக் கருதப் படுவதோடு 'குறைசொற் கிளவி' (தொல். சொல். 482) என்றும் சுட்டப் படுகின்றன. உரிச்சொற்களுக்கு இலக்கணம் வகுக்கின்ற காப்பியரோ,

*"உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை*

*இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்*

*பெயரினும் வினையினும் மெய்தடுமாறி*

*ஒருசொல் பல்பொருட் குரிமை தோன்றினும்*

*பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்*

*தத்தம் மரபின் சென்றுநிலை மருங்கின்*

*எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்" (தொல். சொல். 282)*

என்கிறார். இதற்குச் சேனாவரையர் 'இசைகுறிப்புப் பண்பெனும் பொருட்குத் தாமே யுரியவாதலின் உரிச்சொல்லாயிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச்சொல்லாயிற் றென்பாருமுளர்" என்கிறார். ஈண்டு தொல்காப்பியர் 'செய்யுட் குரியவாய் வரும்' எனச் சுட்டவில்லை.

இருப்பினும் உரையாசிரியர்கள் கருத்தையும் உட்கொண்டு நன்னூலே,

*"பல்வகைப் பண்பும் பகர் பெயராகி*

*ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை*

*ஒருவர் செய்யுட்கு உரியன வுரிச்சொல்" (நன். 422)*

என்கிறது. இருப்பினும் தொல்காப்பியர் சுட்டுகின்ற 120 உரிச்சொற்களை நுணுகிப் பார்க்குமிடத்து அவை செய்யுட்களில் மட்டுமே பயன்பாட்டுடைமை காரணமாக நன்னூல் சுட்டும் 'ஒருவா செய்யுட்குரியன உரிச்சொல்' என்பது மறுத்தற்கியலாததாகிறது.

*"ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்*
*பலசொல் லொருபொருட் குரிமை தோன்றினும்" (தொல். சொல். 292)*

என்னும் இலக்கணம்,

*"ஒருபொருள் குறித்த வேறுசொல் ஆகியும்*
*வேறுபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்*
*இருபாற் றென்ப திரிசொற் கிளவி" (தொல். சொல். 393)*

என்னும் இலக்கணமரபோடு ஒத்துச் செல்கிறது. அவ்வாறெனின் உரிச்சொற்கும் திரிசொற்கும் வேறுபாடு யாதெனின் திரிசொற்கள் தனித்த நிலையில் உலக வழக்கில் எடுத்தாளப்பட்டு வருவன. பெருவாரியாகக் கையாளப்படும் பொருள் தெற்றென பிறர்க்குப் புலனாகும். ஆனால் உரிச்சொற்களோ செய்யுள் வழக்கில் கையாளப்படுவன. கற்றிந்த சான்றோர்களுக்கு மட்டும் தெளிவுறும் பெயர் வினைகளோடு சார்ந்து வரும். மேலும் இசைப்பொருண்மைக்கண்ணும் மனத்தால் அறிந்து உணரும் பொருண்மைக்கண்ணும் பண்புப் பொருண்மைக் கண்ணும் வெளிப்படுவதால் இசையுரிச்சொல், குறிப்புரிச்சொல், பண்புரிச்சொல் எனப் பாகுபடுத்தலாம்.

இவற்றுள் பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி என்பதற்கு இளம்பூரணர் 'பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற உரிச்சொல்லோடு சார்த்தி உணரப்படும்' என்கிறார். தெய்வச்சிலையாரோ இன்னும் ஒருபடி மேலாகச் சென்று "உரிச்சொற்கள் தத்தம் மரபினாற் சென்று நிற்குமிடத்து வழக்கின்கட் பயின்று நடவாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்தி எ.று. பயிலாத சொல்லாவன: உறு, தவ, நனி பயின்ற சொல்லாவன : மிகுதல், உட்கு, உயர்வு என்பன. சேர்த்தலாவது இச்சொற்கள் இச்சொல்லின் பொருள்படும் எனக் கூட்டுதல். 'எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்' என்பது யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக" என்று உரை வகுத்துள்ளார்.

ஈண்டு பயின்ற சொற்களாகச் சுட்டப்படுவன மிகுதல், உட்கு, உயர்வு என்பன. இவை சால, உறு, தவ, நனி, கூர், கழி; உரு, உகப்பு என்ற உரிச்சொற்களுக்கான பொருள்கள் என்பது கவனத்தில் கொள்ள வேண்டும்.

இளம்பூரணர் சுட்டுவது போன்று பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற உரிச்சொற்களோடு எவ்வாறு சார்த்திப் பொருள் உணர்த்துவது? சான்றாக,

| பயிலாத சொல் | பயின்ற சொல் |
|---|---|
| ↓ | ↓ |
| நிழத்தல் | இன்னல் |

இவ்வாறாகப் பயின்ற 'இன்னல்' என்ற உரிச்சொல்லோடு பயிலாத நிழத்தல் என்ற உரிச்சொல்லைச் சேர்த்து யாங்ஙனம் பொருள் கொள்வது.

இதற்குப் பயிலாத உரிச்சொற்களைப் பயின்ற பெயர் வினைகளோடு சார்த்தி உணரப்படும் எனில் பொருத்தப்பாடுடையதாகும்.

தெய்வச்சிலையார் உரிச்சொற்களைத் 'தாது சொற்கள்' (வினைவேர்கள்) (தொல். சொல். 292) என்று குறிப்பிடுகின்றார். ஆனால் உரிச்சொற்கள் அனைத்தும் வினைப்பகுதிகளாக மட்டும் *உள்ளனவா எனின்* குரு, மல்லல், வாள், சீர்த்தி, வம்பு, தெவ் போன்றன பெயர்களாகவும் காணப்படுகின்றன. தொல்காப்பியரே,

"குறைசொற் கிளவி குறைக்கும் வழியறிதல்

*குறைத்தன வாயினும் நிறைப்பெயர் இயல" (தொல். சொல். 447)*

என்கிறார். அம்மட்டுமல்லாது ஆக்கப்பெயர்களாகவும் பண்புப்பெயர்களாகவும், பெயர் மற்றும் வினைகளுக்கு அடைகளாகவும் காணப்படுகின்றன. எனவே தெய்வச்சிலையார் சுட்டுதல் போலத் 'தாதுசொற்கள்' என்பதற்கில்லை.

ஞா. தேவநேயப் பாவாணர் "உரிச்சொற்கள் வழக்கிற் பயிலாத சொற்களென்றும் அவை செய்யுட்கே யுரியவென்றும், அவற்றிற்கு இடம்நோக்கிப் பொருள் கொள்ள வேண்டு மென்றும் அவற்றுட் சில பகுதிப்பொருள் தராமற் பிறபொருள் தருமென்றும் அறிந்து கொள்க" (செந்தமிழ்ச் செல்வி, 13 ஆம் சிலம்பு, ப. 556) என்பது ஏற்புடைத்தாகும்.

இருப்பினும் பாவாணரின் கூற்றுப்படி உரிச்சொற்கள் எனின் வழக்கிற் பயிலாத சொற்களாக இருத்தல். தொல்காப்பியர் சுட்டுகின்ற 120 உரிச்சொற்களுள்

இன்னல் - இன்னாமை (297)

உவப்பு - உவகை (299)

இசைப்பு - இசை (303)

மழ - மழலை (305)

அதிர்வு - நடுக்கம் (310)

தீர்தல், தீர்த்தல் - விடுதல் (312)

ஏற்றம் (ஏத்தம்) - துணிவு (331)

செழுமை - வளம், கொழுப்பு (346)

கவவு (கவ்வு) - அகப்படுத்தல் (351)

இரங்கல் - கழிவு (வருத்தம்) (353)

கறுப்பு, சிவப்பு - வெகுளி, அதனால் வருகின்ற எதிர்ப்பு , நிறம் (366)

இவை உலக வழக்கில் பயிலக் கூடியவைகளே. ஆனால் பாவாணரோ குழூஉக் குறிகளை விளக்குமிடத்து "... பொருள் வெளியான குழூஉக் குறிகள்

உண்மையில் குழூஉக் குறியல்லவேனும் அவை முன்னிருந்த நிலைமை பற்றிக் குழூஉக் குறியென்றே கூறப்படுகின்றன... அதுபோலச் செய்யுட் சொற்களான உரிச்சொற்களும் பொருளறியப்பட்ட பின்னும் உரிச்சொல்லெனவே படும். ஆனால் உலகவழக்கிற்கு வந்தவை மட்டும் உரிச்சொல்லாகா" (செந்தமிழ்ச் செல்வி, 13 ஆம் சிலம்பு, ப. 561) என்றும், "தொல்காப்பியர் காலத்தில் இவை வழங்கியிருப்பின் இவற்றுக்குப் பொருள் கூறியிரார்" என்றும், "ஆகையால் தொல்காப்பியர் கூறிய உரிச்சொற்களெல்லாம் அக்காலத்துச் செய்யுட் சொற்களாயிருந்தன வென்றும் அவற்றுள் சில இக்காலத்து உலகவழக்கில் வழங்குகின்றன வென்றும் அவை இக்காலத்து உரிச்சொல்லாகா வென்றும் அறிந்து கொள்க" (செந்தமிழ்ச் செல்வி, 13 ஆம் சிலம்பு, ப. 562) என்றும் குறிப்பிடுகிறார்.

அவ்வாறாயின் மேற்சுட்டிய சொற்களில் நிறத்தை உணர்த்தும் கறுப்பு, சிவப்பு என்பன உலகவழக்கில் வழங்காதிருந்திருக்குமா? பாவாணர் கருத்திற்கு உடன்படுவோமாயின் இன்றைய பல்வேறான மொழிவழக்காறுகளின் கலப்பு காரணமாகக் கடுவன், தத்தை, பார்ப்பு, குருளை போன்ற பல பெயர்ச் சொற்களுக்கே பொருள் உலகவழக்கில் அறியாது நிகண்டுகளையும் அகராதிகளையும் நாட வேண்டியுள்ளது. அத்தகு சூழலில் அவை உலகவழக்கில் இல்லாது போனது. ஆகையால் அவைகளையெல்லாம் உரிச்சொற்களாக ஏற்க இயலுமா? என்ற வினாவும் உடன் எழுகின்றது.

தொல்காப்பியரே

*"வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா*

*வெளிப்பட வாரா வுரிச்சொல் மேன" (தொல். சொல். 293)*

என்றமையால் வெளிப்படவரினும் அவைகளும் உரிச்சொற்களே எனும் கூற்றை மறந்தனர் போலும்.

எனவே, "அவற்றுவழி மருங்கிற் தோன்று மென்ப" (தொல். சொல். 156) என்பதல்லாமல் உரிச்சொல்லுக்கான இலக்கணத்தோடு "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண் இயல்பின்றே" (தொல். சொல்.389) "உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய" (தொல். சொல். 449) என்பதனையும் சேர்த்து உரிச்சொற்களை இனங்கண்டு காத்தலும் பயன்படுத்தலும் வேண்டுமே ஒழிய வழக்கில் பயன்பாட்டிற்கு வந்தனவற்றை உரிச்சொல் அல்ல என்று நீக்குதல் முறையாகா. எவ்வாறாயினும் வழக்கில் உள்ள / இல்லாத சொற்களாக இருப்பினும் "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" தவிர அனைவராலும் அவைகளுக்கான பொருளை உணர்தல் / புரிதல் என்பது சாத்தியமற்றதாகும்.

# தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள்

முனைவர் பா.நேருஜி

## சென்ற இதழின் தொடர்ச்சி

### மட்பாண்டப் புழங்குபொருட்கள்

பாண்டம் என்ற சொல் பெரும்பாலும் மண்ணால் செய்த புழங்கு பொருட்களையே குறிப்பிடுகிறது. பொதுவாக மனிதன் ஆற்றங்கரைகளில் வாழத்தொடங்கிய நாட்களில் இருந்தே மட்பாண்டங்கள் செய்யக் கற்றுக் கொண்டான். தொல்பொருள் ஆய்வில் கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகளும் உடைந்த மட்பாண்டத் துண்டுகளும் பண்டைக்கால மக்களின் மட்பாண்டக் கலையின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

மட்பாண்ட உற்பத்திக் காலத்தை மனித நாகரிகத்தின் தொடக்க காலம் என்றால் மிகையாகாது. இத்தொழில் நாகரிகத் தோற்றக்காலத்திலிருந்து இன்றுவரை மதிப்புமிக்க தொழில்களில் ஒன்றாக விளங்கி வருகினறது. மட்பாண்டப் பொருள் குறித்த சான்றுகள் சங்க இலக்கியத்திலிருந்து கிடைக்கின்றன. "வெண்ணிக்குயத்தியார் என்ற பெயரில் சங்கப் பெண்பாற் புலவர் ஒருவர் இருந்ததை அறியமுடிகிறது. சங்க காலத்தில் குயவர்கள் தண்டச் சக்கரம் என்னும் திகிரியைப் (சக்கரம்) பயன்படுத்தி மட்பாண்டம் செய்யும் உத்தியை அறிந்திருந்தனர்"[1] என்று கூறப்பட்டுள்ளது.

மட்பாண்டங்கள் செய்யும் குயவர் என்போர் 'சங்க இல்க்கியங்களில் கலம் செய்கோ, வேட்கோ, வேளார், மண்ணீட்டாளர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் மண்ணைப் பிசைந்து பக்குவப்படுத்திக் கைத்திறனால் உருவங்களை வனைந்து உருவாக்கும் தொழில் திறனாளர்களாக விளங்குகின்றனர். "மண்ணால் செய்யப்படும் உருவத்திற்கு 'மண்ணீடு' என்று பெயர்"[2]. பெரியபுராணத்தில் திருநீலகண்டர் சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து கொடுத்துவந்ததை அறியமுடிகிறது.

சுட்ட மட்பாண்டப் பொருட்கள் மக்காத் தன்மையுடையவையாதலால் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஆய்வில் கிடைக்கும் உடைந்துபோன மட்பாண்டத் துண்டுகளைக்கொண்டு புதைந்துபோன காலம், நாகரிகம், மக்களின் வாழ்வியல் முறைகள் மற்றும் வரலாறுகளை வெளிக்கொண்டு வருகின்றனர்.

### மரத்தாலான புழங்குபொருட்கள்

மனித இனம் நாடோடி வாழ்க்கைக்குப் பின் வேளாண்மையை மேற்கொண்ட நிலையில் நிலையான வாழ்க்கையை வாழத்தொடங்கியது. இக்கால கட்டத்தில்தான் பண்பாடும் தோற்றம் பெற்றது. தொடக்க காலத்தில் இயற்கையாக வளர்ந்த மரங்களைக்கொண்டு குடிசைகள், வீடுகள் போன்ற இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. வேட்டைச் சமூகத்தில் மரத்தாலான வேட்டைக் கருவிகளான வில், அம்பு போன்றவை பயன்படுத்தப்பட்டன. உயர்ந்த மலை, மரங்களில் உள்ள தேனை எடுக்க ஒற்றை மூங்கில் ஏணியாகப்

பயன்படுத்தப்பட்டது. கடம்ப மரம் நடப்பட்டு, மேடை அமைத்து முருக வழிபாடு நடைபெற்றது. முல்லை நில ஆயர் மகளிர் புலிபோலும் முழக்கத்தினையுடைய மரத்தாலாகிய மத்தினால் தயிரைக் கடைந்தனர். மருதநில உழவர் மக்கள் மரத்தாலான கலப்பை, பரம்புக் கருவி, கமலை, ஏற்றம், உலக்கை போன்ற வற்றைப் பயன்படுத்தினர். நெய்தல் நிலப் பரதவர்களின் குடில்கள் மூங்கிற் கோலை நிரல்படச் சார்த்தி, வெள்ளிய மரக்கொம்புகளை இடையிடையே கலந்து தாழைநாரால் வலித்துக் கட்டி, மேலே தருப்பைப் புல்லால் வேயப்பட்டவையாக இருந்தன. மேலும், மீன்பிடித் தொழிலிற்கு மரத்தாலான கட்டு மரம், மரக்கலம், படகு, கூரிய அம்பு போன்றவற்றைப் பயன்படுத்தினர்.

சங்க இலக்கியம் குறிப்பிடும் மரங்கொல் தச்சர் என்பதில் மரங்கொல் என்பது மரத்தை வெட்டுவோர், மரத்தொழில் செய்து வந்தோர் எனப் பொருள்படும். இயற்கையாக வளர்ந்துள்ள மரங்களில் தகுதியானவற்றைத் தேர்வுசெய்து அறுத்துத் தச்சர்களால் வீட்டுப்பொருட்கள், வண்டி, தேர் போன்றவை செய்யப்பட்டுள்ளன. "நெடுநல்வாடையில் அரண்மனை மதில்கதவு, வாயிலின் நிலைக்கால் அமைப்பு, வாயில் நெடுநிலை ஆகியவை மரங்கொல் தச்சர்களால் திறமையோடு கலை நுணுக்கமும் தொழில் மேம்பாடும் கலந்து உருவாக்கப்பட்டிருந்தது"[3] என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார்.

**கல்லாலான புழங்குபொருட்கள்**

தொடக்ககால மனிதன் கற்கால மனிதன் என்று குறிப்பிடப்படுவதற்குக் காரணம் கற்களைப் புழங்குபொருட்களாகப் பயன்படுத்தியதே ஆகும். வேட்டையில் விலங்குகளைப் பெறுவதற்கும் கீறுவதற்கும் கற்கள் ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கற்குகைகளே வாழ்விடங்களாகவும் இருந்துள்ளன.

கற்களாலான கோயில்கள் பல்லவர்கள் காலத்தில் மலை முகப் பிடங்களில் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டன. இக்கோயில்கள் "குடபோகம் அல்லது குடைவறை எனப்பட்டன. தனிப் பாறைகளில் செதுக்கு முறையால் உருவாக்கப்பட்ட கோயில்கள் மலைத்தளி எனப்பட்டன. கருங்கற் பகுதிகளைச் செப்பனிட்டு வரையறையுடன் அடுக்கிக் கட்டப்பட்ட கோயில்கள் கற்றளி எனப்பட்டன"[4]. சிற்பக்கலை மேம்பாட்டிற்குக் கல்லே ஆதாரமாக அமைந்தது.

கல்லாலாகிய புழங்குபொருட்களை உருவாக்குபவர்கள் கல்தச்சர், சிற்பி என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் உளிகளினால் கற்களைப் பிளந்தும் செதுக்கியும் மழுக்கியும் துளையிட்டும் சிலைகளையும் பொருட்களையும் உருவாக்குகின்றனர். இவர்களால் கற்களைக் கொண்டு தெய்வ, மனித, விலங்கு உருவங்கள் மற்றும் வீட்டு உபயோகப் புழங்குபொருட்களான திருகை, அம்மி, ஆட்டுக்கல், உரல், கல்வம், உரைகல், குழவிக்கல், கல்விளக்கு, பல்லாங்குழி போன்றவை உருவாக்கப்படுகின்றன.

**பிரம்பு நார் சார்ந்த புழங்குபொருட்கள்**

இயற்கையாகக் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு பல்வேறு புழங்குபொருட்கள் உருவாக்கப்படுகின்றன. அப்பொருட்கள் முடைதல், கட்டுதல், கோர்த்தல் போன்ற செயல்பாடுகளுடன் கலையழகு மிளிரப் பல வண்ணச் சேர்க்கை கலந்து எழிலுடன் வடிவமைக்கப்படுகின்றன.

இத்தொழிலில் மூங்கில் கொம்பு, மூங்கில் பிளச்சு, பிரம்பு, நாணல் (கோரை) பனையோலை, தென்னையோலை, ஈச்ச மிளாறு, புளிச்சமிளாறு, உன்னிமுள் குச்சி, அளிஞ்சிக் குச்சி, ஓடங்குச்சி, கருவேலங் குச்சி, பருத்திமார், நார், ஓலை, கோரை போன்றவை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. இவை பொதுப்பயன்பாட்டில் மட்டுமின்றிப் பண்பாட்டுச் செயல்பாடு களிலும் முக்கியத்துவம் பெறுவதால் இன்றளவும் நிலைபேறுடன் திகழ்கின்றன.

**தோலாலான புழங்குபொருட்கள்**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்கள் வேட்டை விலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை உணவாகக் கொண்டனர். விலங்குகளின் தோல்களைப் பதப்படுத்திப் பயன்படுபொருட்களாக உருவாக்கினர். தோலின் தன்மைக்கேற்பவும் அதன் பயனறிந்தும் போர்க்கருவிகள், இசைக்கருவிகள், அணிகலன்கள், அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருட்கள் போன்றவற்றை உருவாக்கினர். இத்தோலானது "அதள், பச்சை, உரிமை, உரி, சருமம்"[5] ஆகிய பெயர்களில் குறிப்பிடப்படுகிறது. போர்மேற் செல்லும் வீரர்கள் பகைவர்களின் தாக்குதலினின்று தங்களைக் காத்துக்கொள்ளத் தோலாலாகிய கேடகத்தை மிகுதியாகக் கொண்டு சென்றனர் என்பதைச் சங்க இலக்கியப் புறப்பாடல்கள் காட்டுகின்றன. "போரில் ஈடுபடும் வீரர்களும் தேர் செலுத்துவோரும் *உடும்பின் தோலாலாகிய கைச்சரடு* என்னும் அணியினைப் பயன்படுத்தியுள்ளனர். கைவியர்த்தலால் போர்கருவிகள் நெகிழாமல் இருக்க இதனைப் பயன்படுத்தியுள்ளனர். புலித்தோலாலாகிய உறையில் போர் ஆயுதங்களை வைத்துத் தோலைக் கவசமாக அணிந்தும் தற்காத்துக் கொண்டனர். நடுகற்களைச் சுற்றியும் பாசறைகளிலும் தோலால் வேய்ந்து அரண் செய்துள்ளனர்"[6] என்று கூறப்படுள்ளது.

தோலாலாகிய போர் முரசு என்ற வன்இசைக் கருவி மயிர் நீக்கப்படாத தோல்களால் செய்யப்பட்டிருந்தன. "மென் ஒலி எழுப்பும் தோற்கருவிகளான முழவு, பதலை, ஆகுளி, சிறு முழா, கிணைப்பறை, தடாரி, துடி, தண்ணுமை போன்றவை மான் தோலால் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாணாற்றுப் படையும், மதுரைக் காஞ்சியும் மக்கள் தோலாலாகிய பைகளில் மீன் இறைச்சியையும், சூட்டுக் கோலையும், கள்ளையும் இட்டு வைத்திருந்ததாகக் குறிப்பிடுகின்றன"[7]. சங்ககாலம் தொட்டு இன்றுவரை தோலாலாகிய மிதியடி, கைப்பைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. படுக்கை விரிப்புகளாக ஆட்டுத்தோல், மான்தோல், புலித்தோல் ஆகியவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தோலாலாகிய அணிகலன்களும் வழக்கில் இருந்துள்ளன. நீர் இறைக்கும் இறைவைப் பெட்டிகளும், கமலை ஏற்றத்தில் பயன்படுத்தப்படும் சாலும் *தோலாலானவையாகும்.*

தேலாலாகிய பொருட்கள் நீடித்து உழைக்கும் தன்மையுடையன வாகையால் மக்களால் பெரிதும் விரும்பிப் பயன்படுத்தப்படுகின்றன.

**உலோகத்தாலான புழங்குபொருட்கள்**

உலோகக் காலமானது இரும்புக் காலம், வெண்கலக் காலம் என வகைப்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் பன்னெடுங்காலமாய் உலோகப்

பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. உலோகத்தாலான புழங்கு பொருட்கள் என்பது தங்கம், வெள்ளி, பித்தளை, வெண்கலம், இரும்பு போன்ற உலோகங்களால் செய்யப்படும் பொருட்களைக் குறிக்கும். உலோகத்தாலான புழங்குபொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாகவும் அழகுப்பொருட்களாகவும் காணப்படுகின்றன. உலோகப் பொருட்களின் வரிசையில் சங்கிலி, நகைகள், கணையாழி, கோடாரி, மண்வெட்டி, பூட்டு, வாள், வேல், மணி, சலங்கை, பாத்திரங்கள் போன்றவை அடங்கும். உலோகப் பொருட்கள் பெரும்பாலும் ஆண்களால் உருவாக்கப்படுகின்றன.

இரும்பு உலோகத்தைக் கொண்டு பொருட்கள் செய்யும் திறமுடையோர் கொல்லர் எனப்பட்டனர். இதனைக் "கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத் தெறித்த, இரும்புப் பயன் படுக்குங் கருங்கைக் கொல்லன், இரும்பு செய் கொல்லெனத் தோன்றும் நாடன், கொல்லன் எறி பொற் பிதிரில் சிறுபல காய"[8] ஆகிய பாடல் வரிகள் சுட்டுகின்றன. கருங்கைக் கொல்லர் என்று பல பாடல் களில் இவர்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொழில் செய்யுமிடமான உலைக்களத்தில் இரும்பாலான பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

விளக்குகள், உழுகொளு, குயம் (அரிவாள்), கத்திரிகை, யானைக் கொடுந்தொடி, யானையை அடக்கும் தோட்டி, கவை முட்கருவி, மத்திகை (சம்மட்டி), உளி, கத்தி, வாள், கோடாரி, வேல், ஊசி, மண்வெட்டி, களைக் கொத்து, கடப்பாறை, சட்டி, பல்லாங்குழி போன்ற வீட்டு உபயோகப் பொருட்கள், பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கருவிகள் மற்றும் போர்க் கருவிகள் போன்றவற்றை வடித்துக் கொடுத்துள்ளனர். இதனைப் புறநானூறு, "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே"[9] என்று குறிப்பிடுகிறது.

பண்டைக் காலத்தில் பல்வகை உலோகங்களைக் கொண்டு தங்களுக்குத் தேவையான பொருட்களைச் செய்வதில் தமிழர் சிறப்புடன் திகழ்ந்துள்ளனர். இரும்பு கொண்டு தொழில்செய்யும் கொல்லர்களைப் போன்று வெண்கலம், செம்பு, பொன் போன்ற உலோகங்களை உருக்கிப் பல்வகையான பொருட்கள் செய்யும் வன்தொழிலாளர்கள் ஊர்தோறும் வாழ்ந்துள்ளனர். "வெண்கலத்தை உருக்கிப் பொருட்கள் செய்வோர் கஞ்சகாரர் என்றும், செம்பினால் பொருட்கள் செய்வோர் கம்மியர் என்றும், செம்பு கொட்டிகள் என்றும், பொன்னால் பொருள் செய்வோர் பொற்கொல்லர்"[10] என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளி, தங்கம் ஆகிய உலோகத்தால் செய்யப்பட்ட பாத்திரங்கள், ஆபரணங்கள் போன்றவை சங்க காலத்திலிருந்து இன்றுவரை செல்வந்தர் களால் மட்டுமல்லாது நடுத்தர மக்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வழிபாட்டுடன் தொடர்புடைய வேல், சூலம், அரிவாள், மணி போன்ற புழங்கு பொருட்களும் தமிழர்களின் சடங்குகள் மற்றும் வழிபாட்டு நிகழ்வுகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**தொடர்ச்சி அடுத்த இதழில்**

# சங்கம் மற்றும் கல்லூரிச் செய்திகள்

நமது செந்தமிழ்க் கல்லூரியின் 59ஆவது பட்டமளிப்பு விழா 02.03.2016 ஆம் நாள் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரிச் செயலாளர் திருமிகு இராணி.லெட்சுமி நாச்சியார் அவர்கள் தலைமை ஏற்க, மதுரை நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்கறிஞர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். முதல்வர் வரவேற்புரை ஆற்ற, காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் பெருமைமிகு துணைவேந்தர் பேராசிரியர் சொ.சுப்பையா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை நல்கியதோடு சென்ற ஆண்டு நடைபெற்ற இறுதித் தேர்வுகளில் வெற்றிபெற்ற 124 மாணவர்களுக்குப் பட்டங்களையும் வழங்கினார். மேலும் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினரும், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினரும் தகவல் தொழில்நுட்பத்துறைப் பேராசிரியருமான ம.இராமகிருஷ்ணன் அவர்கள் பட்டம் பெற்ற மாணவர்களை வாழ்த்திப் பேசினார். துணைமுதல்வர் கி.வேணுகா நன்றி கூறினார்.

14.3.2016 அன்று நம் கல்லூரியில் மகளிர் தின விழா முதல்வர் தலைமையில் துணை முதல்வர் வாழ்த்துரையோடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. நம் கல்லூரிப் பேராசிரியைகள் பெண்களின் இன்றைய நிலைபற்றியும், சமுதாயக் கொடுமைகளையும் எடுத்துரைத்து அதற்குத் தீர்வு பெண்கல்வியே என்ற கருத்தை மையமிட்டுச் சிறப்புரை ஆற்றினர். மாணவிகள் விழிப்புணர்வு நாடகங்களையும் கலைநிகழ்ச்சிகளையும் நடத்தினர். கவிதைகளையும் படைத்தனர். இன்றைய பெண்களின் நிலைப்பாடு தொடர்பான குறும்படங்களைக் காட்டி கல்லூரி மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.


21.3.2016 அன்று நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் 150ஆவது பிறந்தநாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இவ்விழாவில் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமையேற்க நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செயலர் வழக்கறிஞர் திருமிகு ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் நிறுவனரின் தமிழ்ச் சங்கத் தோற்றம் குறித்தும், தமிழ்ப் பற்று குறித்தும் படைப்புகள் குறித்தும் மிக ஆழமாகவும், நுட்பமாகவும் எடுத்துரைத்தார். தஞ்சாவூர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரியின் முதல்வர் முனைவர் மு.இளமுருகன் அவர்கள் நிறுவனரின் புலமையும் சமுதாயத் தொண்டும் வ.உ.சி.க்குச் சுதேசிக் கப்பல் வாங்க உதவிய பாங்கையும் தமக்கே உரிய எழுச்சி நடையில் எடுத்துரைத்தார். விழாவில் பங்கேற்ற வரலாற்று ஆய்வாளர் திருமிகு. மருதுமோகன் அவர்கள் நிறுவனரின் தமிழ்த் தொண்டு மற்றும் வரலாற்று நிகழ்வுகளை எடுத்துரைத்தும் சிறப்புரை ஆற்றினார். நான்காம் தமிழ்ச்சங்கப் பொதுக்குழு உறுப்பினரும் மேனாள் பேராசிரியருமான முனைவர் பொன்.விஜயன் வரவேற்புரை நல்க, செந்தமிழ்

கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரியின் கல்லூரிக் குழு உறுப்பினரும், நான்காம் தமிழ்ச்சங்கப் பொதுக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் ச.தரசதராமன் நன்றியுரை நல்கினார்.

28.03.2016 அன்று ந.மு.வேங்கடசாமி நாட்டார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு மற்றும் பேச்சுப்போட்டி நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் இப்பேச்சுப் போட்டியில் பங்கேற்று நாட்டாரின் தமிழியல் ஆய்வு பற்றிய கருத்துக்களை மிகத் தெளிவாக அவர்களுக்கே உரிய நடையில் வெளிப்படுத்தினர். முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கிச் சிறப்பு செய்யப்பட்டது. இப்பேச்சுப் போட்டிக்கு மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரித் தமிழ் உதவிப்பேராசிரியர் க.ராமர் அவர்கள் நடுவராக இருந்து நாட்டார் பற்றிய நுட்பமான கருத்துக்களையும், ஆய்வுக்கு வேண்டிய தரவுகளையும் எடுத்துரைத்தார். இவ்விழாவில் சென்னை மாநிலக் கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மறைமலை இலக்குவனார் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு நாட்டாரின் தமிழியல் ஆய்வு பற்றிய கருத்துக்களை நுண்மாண் நுழைபுலத்தோடு மாணவர்களின் மனநிலைக்கு ஏற்பவும், ஆய்வாளர்களின் ஆய்வுக்கு ஏற்பவும் கருத்துக்களை மிகத் தெளிவாகவும் நுட்பமாகவும் தமக்கேயுரிய ஏற்ற நடையில் வழங்கினார். முதல்வர் அவர்கள் வரவேற்க, துணைமுதல்வர் அவர்கள் நன்றி கூறினார்.

7.4.2016 கல்லூரியின் 59ஆவது ஆண்டுவிழா, விளையாட்டுவிழா மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட நிறைவுவிழா என்ற முப்பெரும் விழா கல்லூரிச் செயலாளர் தலைமையில் நான்காம் தமிழ்ச் சங்கச் செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது. துணை முதல்வர் வரவேற்புரையாற்ற முதல்வர் ஆண்டு அறிக்கை வழங்கினார். இம்முப்பெரும் விழாவில் சிறப்பு விருந்தினராக மதுரை அமெரிக்கன் கல்லூரி முதல்வர் திரு.தவமணி கிறிசுடோபர் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும், பல்வேறு துறைகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கியும் சிறப்புச் செய்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே நிறைவுபெற்றது.

## ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்




பி.எஸ்.ராமையா
(மே.18)



கா.அப்பாத்துரை
(மே.26)



மா.இராசமாணிக்கனார்
(மே.26)



ஜெகசிற்பியன்
(மே.26)


பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month



# செந்தமிழ் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் சு.விஜயன்**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
**THE SECRETARY**
Madurai Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: இரா.சதாசிவம், 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: ஜெயஸ்ரீ கிராபிக்ஸ், காமராஜர்சாலை, மதுரை-625 009.